# வருணபேதவிளக்கம்.

இஃது

சென்னை லௌகிகசங்கத்தில்

ஒருவராகிய

ம. மாசிலாமணியவர்களால்

இயற்றப்பட்டு,

ஷை யார் அனுமதியினால்

ம-குமாரசாமி முதலியா ரவர்களால்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

சென்னைப் பண்டித மித்திர பிரெஸ்.

1900.

உ

சிவமயம்.

# உயர்ந்தபதிப்புப் புத்தகங்கள்.

| | |
|---|---|
| சிவபராக்கிரமம்—இது வடமொழிப் பிரமாணங்களோடு 64-சிவபராக்கிரமசரிதங்களும், காணுந்தோறும் ஆநந்தமெய்தத்தக்கதும், பூசிக்கத்தக்கதுமாகிய 64-திருவுருவப் படங்களும் அமைந்துள்ளதும் உயர்ந்த காலிகோ பொன் கிலிட்டுபவுண்டு செய்ததுமாகிய புத்தகம் | 1 4 0 |
| திருக்குறள் திருவருட்பயன் மூலமும், யாவரும் சுலபமாக வாசித்து எளிதிற் பொருளறியத்தக்க கருத்துரையும் சேர்த்து திருவள்ளுவ நாயனர், உமாபதிசிவாசாரியார், திருவுருப்படத்துடன்காலிகோ கட்டடம் பாக்கட்புத்தகம். | 1 0 0 |
| பெரியபுராண வசனச்சுருக்கமும் - திருவிளையாடற்புராண வசனச்சுருக்கமும் - ஆறுபடத்துடன் ஒன்று சேர்த்த (மார்பில்கட்டடம்.) பாக்கெட்புத்தகம். | 1 0 0 |
| ஷை பெரியபுராண வசனச்சுருக்கம் - தனித்து மூன்றுபடத்துடன் (மார்பில்கட்டடம்.) பாக்கட்புத்தகம். | 0 10 0 |
| ஷை திருவிளையாடற் புராண வசனச்சுருக்கம் - தனித்து மூன்றுபடத்துடன் (மார்பில்கட்டடம். பாக்கட்புத்தகம். | 0 10 0 |
| தோத்திரக்கொத்து - இதில் (70) பிரபந்தங்கள் அடங்கியுள்ளது. இவைகளின் பெயரை ஷை புத்தக அட்டவணையில் காண்க. (காலிகோ கட்டடம்) | 0 12 0 |
| சிவபுண்ணியத்தெளிவு. இது - சிவாலயங்களுக்கும், சிவனடியார்களுக்கும், இன்னவைசெய்தால்,இன்னபலனடைவரென்பதைவிளக்கும். | 0 [illegible] 0 |

மேற்கண்ட புத்தகங்களுக்கு போஸ்டேஜும், வி-பி சார்ஜும் பிரத்தியேகம். வேண்டுவோர் அடியிற்குறித்தவருக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ம. குமாரசாமிமுதலியார்,

57, நம்மாழ்வார் வீதி,

சென்னை.

# முகவுரை.

மிகு விவேகமும் பெருந்தகைமையும் உடைய எனது ஜனனதேசத்தவர்களே! பிராமணர் நம்மை விலங்கினுங் கடையராகக் கீழ்ப்படுத்தி நமது கஷ்டார்ஜிதமாகிய செல்வங்கள் முழுமையுமே கவருவான்வேண்டி, வேதங்களையும், ஆகமங்களையும், புராணங்களையும், இதிகாசங்களையும், மநுதரும நூலையும் எழுதிவைத்தனர். இவற்றுள் வேதங்களும் ஆகமங்களும் வேதவாக்கென்றும், இதிகாசங்களும் புராணங்களும் வேத அருள்பெற்ற இருஷிகள் வாக்கென்றும், மநுதருமநூல் தெய்வத்தன்மைபொருந்திய ஓர் அரசனது வாக்கென்றும் நிஷ்கபடிகளாகிய நம்முன்னோர்களுக்குத் துர்ப்போதனைகளூட்டிவிட்டதுமன்றி அவ்வேதாகமாதிநூல்களையும் அவற்றை எழுதிய சம்ஸ்கிருதபாஷையையும் நாம் கற்கப்படாதென்றும் நமக்குப் பயமுறுத்திக் காலந்தோறும் நம்மை நிர்மூடராக்கி வருத்திவருகின்றனர். ஆடு தன்னை முழுக்காட்டி, தூபதீபங்காட்டி யுபசாரஞ்செய்யும் ஓச்சனை நம்பிப் பின்பற்றுவதுபோல நாம் பிராமணர்களையே "பூத்தேவர்க" ளென நம்பி நொறுங்குண்டு, வருந்தித்தேடிய பொருள்களை நம்மை நாமே வஞ்சித்து அவர்களுக்கே தானஞ்செய்துவிட்டு, வாடி வதங்கி வருந்துகின்றோம். இவ்வாறு மதியீனத்தால் இகபோக சுகத்தை இழக்கும் நம்மவருக்கு அப் பிராமணர்கள் தங்கள் சுயப் பிரயோசனத்தின் பொருட்டே இயற்றிய அவ்வேதாகமாதி நூல்களிலுள்ள சூதுகளையும், வஞ்சனைகளையும் கரதலாமலகம் போல வெடுத்துக்காட்டி, அவற்றால் பந்திக்கப்பட்டிருக்கும் இருப்புச் சங்கிலி போன்ற "வருணபேதம்" என்னும் பலத்த பாசத்தை நியாயவாள்கொண்டு துண்டித்து, அந்நிர்ப்பந்தத்தினின்றும் நம்மவர்களை விடுவிக்கவேண்டுமென்னும் எண்ணம் நெடுநா

ளாக எனதுளத்தில் உலாவிக்கொண்டிருந்ததனு லேயே இந்நூலையெழுத ஆரம்பித்தேன்.

இதற்குமுன் நான் எடுத்துக்கொண்ட விஷயத்திலும் அதி பிரயோஜனமும் இன்பமுமான விஷயங்களைப்பற்றி பல கலைக்கியானிகள் எழுத்தாலும் வாக்காலும் பிரசித்திப்படுத்தி இருக்கின்றனர். நமக்கு அவசியமானவைகளாயும், நமது க்ஷேமத்தைப்பற்றினவைகளாயும், நமது நன்மைகளைத் தழுவினவைகளாயும் இருக்கின்ற நீதிநூல் ஒழுக்கநூல் ஆகிய இவைகளை ஒன்றன்பின் ஒன்றாக வெளிப்படுத்தி இருக்கின்றனர். இத்தியாதிநூல்களையும், வருணபேதங்களையும் உங்களுக்கு நெடுநாளைக்குமுன்னமே புகட்டியிருக்கும் உங்கள் முன்னோர் ஒழுக்கத்தால் உங்கள் மனதில் வேரூன்றிக்கிடக்கும் பிராமணாபிமான மென்னும் விருட்சமானது எத்தனைமுறை நியாயக் கோடரிகொண்டு வெட்டினும் அப்பொழுது மாத்திரம் மாய்ந்ததுபோ லிருந்து பின் கொழுந்துவிட்டுத் தளிர்த்தே வருகின்றது. இப்பொழுது வருணபேதத்தைப்பற்றி நான் உங்களுக்கு ஏதும் நவீன அறிவு கற்பிக்கக்கருதவில்லை. பௌத்தர் அரசாண்ட காலத்தொடங்கி ஆங்கிலேயர் அரசாண்டுவரும் இக்காலமட்டும்வாழ்ந்த நிறைமொழிமாந்தர் பலர் பிரசித்தப்படுத்தியதையே மேலுமேலும் உங்களுக்குப் பாகுபடுத்தி கியாபகத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

வருணபேதத்தை அளவிட்டுவருகையில் பிராமணர் அதனோடு சம்பந்தப்பட்டிருப்பதனுல் அவர்களைப்பற்றியும் எழுதவேண்டிய தீரா அவசியம் நேரிட்டதனுல் எழுதியதேயன்றி அவர்களை அவதூறுசெய்யவெண்ணி எழுதியதல்ல.

சென்னைநகர்,
கஅ௦௦ரு
ஜனவரிமீ உ௰௨

இப்படிக்கு:
☞ ம-மாசிலாமணி.

# வருணபேதவிளக்கம்.

## இந்து ஆரிய நிலைமை.

### அதிகாரம். 1.

### பூலோகத்தாரின் பிரதான பிரிவுகள்.

இப்பூலோகத்திலுள்ள கண்டங்கள், தீவுகள் திட்டுகளிலுள்ள மனிதர் யாவரும் ஒருவகுப்பினரேயாயினும், இவர்கள் தேசபேதத்திலும், நிறத்திலும், பாஷையிலும், ஆசார ஒழுக்கங்களிலும் வேறுபட்டிருக்கிறார்கள். இம்மனிதர் ஐவகைப் பிரிவினராகப் பிரிந்திருக்கின்றனர். அவர் யாவரெனில்,—மங்கோலியர், காக்கேஷியர், எத்தியோப்பியர், மலாயர், அமெரிக்கர் என்பவர்களே.

I. மங்கோலிய ஜாதியார்.—சீனர், டார்ட்டரிதேசத்தார், டர்க்கிதேசத்தார், ஐரோப்பாவின் வடபாகத்திலுள்ள பின்லண்டு, லாப்லண்டு, ஹங்கரியாவிலுள்ளவர்களும், மங்கோலியா, மன்சூரியா, கொரியா, திபெத், இந்தியா, பர்மா, சயாம், அனும் ஆகிய தேசங்களிலுள்ளவர்களும், ஜப்பான் இலங்கைமுதலிய தீவாரும் மங்கோலிய ஜாதியைச் சார்ந்தவர்கள். இவர்கள் வெளுப்பு நிறமும், வெளுப்படைந்த மாநிறமும், அகன்ற மூக்கும், கறுத்த கண்ணு முடையவர்கள். இவர்கள் தங்கள் பூர்வ வழக்கத்தையே பின்பற்றுந் தன்மை யுடையவர்கள். சிலை வைப்பது இவர்கள்வழக்கம். இதரதேசத்தவர்களின் நாகரிகங்களைக் கற்றுக்கொள்ளப் பிரியப்படாதவர்கள். பூலோ

கத்தில் முதல்முதல் கல்வியிலும், நாகரிகத்திலுஞ் சிறப் படைந்து புகழ்பெற்றிருந்தவர்கள் மங்கோலிய ஜாதியாரே.

II. காக்கேஷிய ஜாதியார்.—பிரான்சியர், ஜர்மானியர், பாரசீகர், பிராமணர், அங்கிலேயர், அராபியர் முதலானவர்கள் காக்கேஷிய வகுப்பில் சேர்ந்தவர்கள். இவர்களில் சிலர் வெண்ணிறத்தாராகவும், சிலர் மாநிறத்தாராகவும் இருக்கிறார்கள். இவர்கள் தலை திரண்டதாகவும், மயிர் கருமையானதாகவும், வெளுப்படைந்த மஞ்சள் நிறமானதாகவுமிருக்கும். இவர்கள் நீண்டமூக்கும், கழுமூக்கும், உயர்ந்தநெற்றியு முடையவர்களாக இருந்து பல தேசங்கள் தோறும் திரிந்து, மங்கோலிய ஜாதியாரை அநுசரித்து, இப்பொழுது மிகு சீர்திருத்தமடைந்து, மங்கோலிய ஜாதியாரினும் சிறப்புற்றிருக்கின்றனர்.

III. எத்தியோப்பியர்.—ஆப்பிரிக்காகண்டத்தவர்களாகிய நீகிரோவர் கறுப்பு நிறமும், சுருட்டை மயிரும, சப்பை மூக்கும், பெரிய கன்னமும், சிறு நெற்றியும், பெரு உதடுமுடையவர்கள். அடிமைத்தனம் இவர்களுக்குள் நெடுங் காலமாக இருக்கின்றது.

IV. மலாய ஜாதியார்.—பொலினீசியா ஜாதியார் மலாய ஜாதியைச் சேர்தவர்கள். இவர்கள் சிறுநெற்றியும் மாநிறமுமுடையவர்கள்.

V. அமெரிக்கர்.—அமெரிக்கா கண்டத்திலுள்ளவர்கள் அமெரிக்கரென்னப்படுகிறார்கள். இவர்கள் செந்நிறமும், ஆழ்ந்தகண்ணும், கழுமூக்கும், சிறுதலையு முடையவர்கள்.

மேற்கூறிய ஐந்து வகுப்பினரும் நிறத்தால் மூன்று பிரிவினையுடையவராகப் பிரிக்கப்படுகிறார்கள். அவர்கள் வெண்ணிறம், மாநிறம், கருநிறம் என்னும் மூன்றுவித நிறமுடையவர்களாம்.

I. வெண்ணிறத்தார்.—ஐரோப்பா, மேல் ஆசியா வட ஆப்பிரிக்காவிலும் இப்போது, அமெரிக்கா, இந்தியா முதலிய இடங்களிலும் குடியேறியிருப்பவர்களாம்.

II. மாநிறத்தார்.—கீழ் ஆசியா, வட அமெரிக்கா, வட ஐரோப்பாவிலுள்ள பின்லெண்டு, லாப்லெண்டு, ஹங்கேரியா, டர்க்கியிலும், பசுபிக் சமுத்திரத்திலுள்ள தீவுகளிலும், உள்ளவர்கள்.

III. கறு நிறத்தார்.—ஆபிரிக்காவின் மத்தியிலும், தென் சமுத்திரத்திலும், சண்டா முதலிய தீவுகளிலும், ஆஸ்திரேலியா தீவின் வடகரையிலும், கீழ்கரையிலும் உள்ளவர்களும், தென் அமெரிக்காவில் உள்ளவர்களுமாம்.

இவ்வகுப்புகள் சிறுபான்மை எங்கும் கலப்புற்றிருக்கும். இவர்கள் அனைவரும் மிருகங்களுக்குரிய கொம்பு, வால் முதலியவை இல்லாமல் முப்பத்திரண்டு பற்கள் உடையவர்களாகவும், நிமிர்ந்த ரூபமும், வேலைகள் செய்வதற்கேற்ற கைகளை அமையப்பெற்றவர்களாகவும், பாஷை அறிவு, விவேகம், கல்வி, ஞானம் முதலியவற்றிற் குரியவர்களாகவும் இருக்கிறார்கள்.

பூலோகத்திலுள்ள மனிதரனைவரும் டியூரேனிய குடும்பத்தார், ஆரிய குடும்பத்தார், ஷெமிடிக் குடும்பத்தார் என மூவகைப் பெருங்குடும்பத்தாராக பாஷாபரீட்சகர்கள் பிரித்திருக்கின்றனர்.

ஐரோப்பாவில் ஆரிய குடும்பத்தாரும், ஷெமிடிக் குடும்பத்தாரும், டியூரேனிய குடும்பத்தாரும் வசிக்கிறார்கள். உருஷியாதேசத்தின் வடபாகத்திலுள்ள லாப்லன்ட் தீவாரும், இட்டலிதேசத்தில் வசிக்கும் பாஸ்க் (Basque) என்ற ஜாதியாரும், ஆஸ்திரியாதேசத்தில் வசிக்கும் ஹங்கேரியன்ஸ் என்னும் ஜாதியாரும், டர்க்கி தேசத்தாரும் டியூரேனிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

| | |
|---|---|
| டியூரேனிய குடும்பத்தார். | பங்காளி.<br>ஹிண்டி, அஸ்ஸாம் பாஷை,<br>நீபால் பாஷை, காஸ்மீர் பாஷை,<br>பஞ்சாபி, குஜராட்டி,<br>கச்சு, சின்ட், மராட்டி, |

டியூரேனிய குடும்பத்தார். { தமிழ், தெலுங்கு, ஒரியா, கன்னடம் முதலிய பாஷை பேசுகிறவர்களும், ஜபான், இலங்கை தீவாரும், தீபெத், மங்கோலியா, மஞ்சூரியா, கொரியா, சீன, பர்மா, சயாம், அனும் தேசத்தவரும், டர்க்கி, ஹங்கெரி தேசத்தவரும், லாப்டன்ட் தீவாரும் மங்கோலிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

## அதிகாரம். 2.

## இந்துக்களின் புராதனம்.

1. ஆசியாகண்டத்தின் தென்திசையில், கிழக்கில் வங்காளக் குடாக்கடலையும், மேற்கில் அரபிக்கடலையும், வடக்கில் இமயமலையையும், தெற்கில் இந்து மகா சமுத்திரத்தையும், எல்லையாகவுடைய பரியாயதீபமே இந்து தேசமென்னப்படும்.

2. இவ்விந்துதேசமானது உருவத்தில் பெரியது சிறியதுமான பல நதிகளையும், வனங்கள் அடர்ந்த மலைத்தொடர்களையும் உடையதாயும், பூசாரமுள்ளதாயும், மானிடதேகத்திற்கு மிகு அனுகூலித்த சீதோஷ்ணங்களையுடையதாயு மிருப்பதுமன்றி, மானிடரின் போஜனத்திற்கு வேண்டிய கனிவர்க்கங்களும், தானியவகைகளும் ஏராளமாக அசப்படுவதுமாக இருப்பதனால், மனிதர் இத்தேசமெங்கும் படர்ந்து அடர்ந்து வசிக்கின்றனர். இவ்வாறு வசிக்கும் இச்சனங்களுக்கு இந்துக்கள் என்று பெயர்.

3 இவ்விந்துக்கள் இத்தேசத்தின் பூர்வக் குடிகளெனவும், இதரதேசங்களினின்று இத்தேசத்தில் குடியேறினவர்களெனவும் இருவகுப்பினராகப் பிரிக்கப்படுகின்றனர்.

4 இவ்விருவகுப்பினருள் இத்தேசத்தவர்கள் நிறத்திலும், சாயலிலும், பாஷையிலும், நடையுடைகளிலும், ஆசாரத்திலும், போசனத்திலும் பேதப்பட்டிருந்தாலும்

இமயமலைச் சாரலிலுள்ள காஷ்மீரம், பாஞ்சாலம், நேப்பாளம், பங்காளம், அயோத்திமுதல் கன்னியாகுமரிவரையிலுள்ள க்ஷத்திரியர், வணிசர், வேளாளர், கவரைகள், டள்ளிசள், சான்றூர், குறவர், மறவர், வேடர், வில்லியர், பள்ளர், பறையர், புலையர், இருளர், தொம்பரவர், சக்கிலியர், மராட்டியர், பங்களீயர், சீக்கியர் முதலிய பலவகைப் பிரிவினையுடையவர்களாய்த் தற்காலம் பிரிந்துள்ளவர்கள் யாவரும் இத்தேச பூர்வக்குடிகளினின் பின் சந்ததியாரெனவும், பிராமணர், மகமதியர், பாரசீகர், ஐரோப்பியர், பர்மியர், சிங்களர், அராபியர் முதலியோர் இதரதேசங்களினின்று இத்தேசத்திற் குடியேறியவர்களின் பின்சந்ததியாரெனவுங் கூறப்படும்.

5. இத்தேசப் பூர்வக்குடிகள் பேசும் பாஷைகளில் பிரதானமானவை:—பங்காளி, இண்டி, ஆசாம்பாஷை, நேபாளபாஷை, காஸ்மீர் பாஷை, பஞ்சாபிபாஷை, குஜராத்திபாஷை, கச்சி, சிந்துபாஷை, மகாராஷ்டிரம், தமிழ், தெலுங்கு, ஓரியா, கன்னடம், மலையாளம் முதலியவையே. இப்பாஷைகள் யாவும் சங்கிலியைப்போல ஒன்றிற்கொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன. இங்கிலீஷ் மொழிகளில் அனந்தம் இத்தேசபாஷைகளுடன் கலந்துவருவதுபோல, சமஸ்கிருதமொழிகளிலும் அனந்தம் இத்தேச பூர்வபாஷைகளுடன் கலந்துவருவதேயன்றி சமஸ்கிருதத்திற்கும் இத்தேச பூர்வபாஷைகளுக்கும் சிறிதேனும் சம்பந்தமேயில்லை. சமஸ்கிருத மொழிகள் வட இந்தியாவில் வழங்கிவரும் பூர்வ பாஷைகளில் 100 - க்கு 15-ம், மத்திய இந்தியாவில் வழங்கிவரும் பூர்வ பாஷைகளில் 100 - க்கு 10 - ம், தென்தேச பாஷையாகிய தமிழில் 100 - க்கு 2-மாகக் கலந்திருப்பதால், பிராமணர் வட இந்தியாவில் முன்னர்க்குடியேறி, காளடைவில் தென்கோடி வரைக்கும் வந்து பரவியிருக்கவேண்டுமென்று தெளிவாக விளங்குகின்றது.

6. பூர்வகாலத்தில் இத்தேசத்தவர்கள் அனைவரும் யானை, பாம்பு, ஆடு, மாடு, குதிரை, மீன், ஆமை முதலிய பலவகைப் பிராணிகளுடைய மாமிசங்களையும் புசித்து வந்தனர். பௌத்தமதம் தோன்றியபின் சிலர் மரக்கறி போஜனர்களாகவும், சிலர் ஆடு கோழி மீன்வகைகளைமட்டும் புசிப்பவர்களாகவும் மாறிவிட்டனர். நாடோடிகளாக இருக்கும் அநாகரீகர்களாகிய குறவர், தொம்பரவர், மறவர் முதலியோர்மட்டும் இன்னமும் முன்போலவே பலவகைப் பிராணிகளுடைய மாமிசங்களையும் புசித்துவருகின்றனர்.

7. இத்தேசத்தவர்கள் தங்கள் அம்மான் மகளையும், அத்தையின் புத்திரியையும், தமக்கையின் புதல்வியையும் மணம்புரிவார்கள். பூர்வகாலத்தில் இத்தேசமாதர்கள் தத்தம் அரைகளில் ஒவ்வோர் சிற்றுடையைமட்டும் உடுத்தியிருந்தனர். இத்தகைய மாதர்கள் பவானி, ஆற்றூர், சங்கவித்துருக்கம், மலையாளம்முதலிய பலவிடங்களில் இப்போதும் காணலாம். இத்தேசத்து மாதர்கள் தத்தம் சத்திக்குத்தக்கபடி ஒரு கணவன்முதல் ஏழு கணவர்வரையிலும், புருஷர்கள் ஒரு மனைவிமுதல் நூறு இருநூறு மனைவியர்வரையிலும் விவாகம் புரிந்துவந்ததுமன்றி, புருஷர்கள் வைப்பாட்டிகளையும் வைத்துக்கொண்டுவந்தார்கள். இவ்வழக்கம் இக்காலத்தில் பெரும்பாலும் மாறிவிட்டது.

8. இத்தேச பூர்வக்குடிகளாகிய மங்கோலிய ஜாதியார், ஆரியர் இத்தேசத்தில் குடியேறுவதற்குமுன், நாகரிகமடைந்திருந்தனரா அல்லராவென ஆராய்ந்து பார்ப்போம். உறவினர் உறவினரல்லாதவர் யாவரையும் அன்னியராகப் பாவித்திருக்கும் மிலேச்சரைப்போல், இராமல் உதிர சம்பந்தமுள்ள ஒவ்வொருவருக்குரிய தந்தை, தாய், தங்கை, தமக்கை, தமயன், தம்பி, மருமகன், மருமகள், அம்மான், அத்தை, மாமனார், மாமியார், அத்தான், மைத்துனன், கொழுந்தன், கொழுந்திமுதலிய சுற்றத்தாருடைய பெயர்கள் ஆரியர் இத்தேசம் வருவதற்கு நெடுங்காலத்திற்கு

முன்தொடங்கியே இத்தேசத்தவர்களுக்குள் வழங்கிவருவதாலும், இவர்கள் தங்கள் சுற்றத்தவர்களுடன்கூடி வசிக்கப் பிரியப்படுவதாலும், இளையோர் மூத்தோர் வாக்குக்கு ஒரு சிறிதும் எதிர்வாக்குரையாமல் அவர்களுக்கு அடங்கி ஒழுகுவதாலும், இளையோர் மூத்தோருடன் முறை பிறழாது மரியாதையாகச் சம்பாஷிப்பதாலும், அங்குமிங்குந் திரியும் நாடோடிகள்போல் இத்தேசத்தவர்கள் திரியாமல் ஓரிடத்திலேயே தங்கி தங்கள் குடும்பத்தாரோடும், சிநேகரோடும் வசித்து, பூமியைச் சீர்திருத்தி, எருவிட்டு, விதை விதைத்து, நீர்பாய்ச்சி, பயிர்செய்து அதனால் ஜீவித்து வருவதாலும், ஆரியர் இத்தேசம்வர நெடுங்காலத்திற்கு முன்னமே இத்தேசத்தவர் நாகரிகமடைந்திருந்தனரென்னத் தெளிவாக விளங்குகின்றது.

9. பூலோகத்தாரனைவரும் மிலேச்சத்தன்மையுடையவர்களாகவிருந்த காலாரம்பத்தில் தாங்கள் நெருங்கிய குடும்பத்தவர்களுக்குள்ளே யாவரேனும் வியாதியால் பீடிக்கப்பட்டு இனி உயிர்த்தெழாரென காணப்பட்டால் அவ்வியாதியஸ்தர்களைக் கொன்று பிடுங்கித் தின்றுவந்தனர். இப்படிச் செய்துவந்தவர்களுக்குள் அறிவு சற்று விருத்தியான காலத்து, தம் குடும்பத்தினரைக் கொன்று தின்னலாகாதெனவுணர்ந்து, தம்மிலும் பலவீனராக இருந்து தமக்கெதிர்ப்படுவோரைமாத்திரம் பிடித்துக் கொன்று தின்றுவந்த அநேகவருஷங்களுக்குப்பின் இதுவுந் தகாததிரியையென உணர்ந்து நரமாம்ச போஜனத்தைத் தவிர்த்து, தாழ்ந்த ஜீவஜெந்துக்களைமாத்திரம் புசித்துவந்தனர். இப்படியாக ஜீவஜெந்துக்களைத் தீயில் பாகப்படுத்தாமல் உதிரத்துடன் புசித்துவந்த அநேகமாயிர மாண்டுகளுக்குப் பின், அம்மாமிசாதிகளை உப்பு, புளி, காரம்முதலியவற்றுடன் கலந்து சமைத்துப் புசிப்பதே தகுதியென அறிந்து, அவ்வாறே நெடுங்காலமாகப் புசித்துவந்தனர். இவ்வாறு மானிடர் மாமிசபோஜனம் செய்துவருவதை பௌத்தமதத்தை ஏற்படுத்திய கௌதமர் கண்ணுற்றுப் பார்த்து, மனி

தர் தம் உடலைப் போஷிப்பதற்காக ஜீவஜெந்துக்களைத் தடிக்கப் பதைக்கக்கொன்று அவற்றின் மாமிசாதிகளைப் புசிப்பது தகாதகிரியையெனவும், மனிதர் ஒருவரையொருவர் பலவிதங்களால் வஞ்சித்துப் பிறருடைய கஷ்டார்ஜ்ஜிதங்களைக் கவர்ந்து அதனால் ஜீவிப்பதும் அநீதியெனவும் உய்த்துணர்ந்து இத்தேசத்தின் பெரும்பாலாரை மரக்கறிபோஜனர்களாகச் சீர்திருத்தினர். இங்ஙனம் இப்பூலோகத்தில் ஜீவ இம்சை செய்யலாகாதென்று ஏற்படுத்தி முதல்முதல் போதித்தவர் இத்தேசத்தவரான கௌதமரேயன்றி மற்றெவருமல்லர். ஆகையால் ஆரியர் இத்தேசம் வருவதற்கு நெடுங்காலமுன்னந் தொடங்கியே இந்துக்கள் ஜீவ இம்சை செய்யாமல் நாகரிகமடைந்திருந்தனரென்று தெளிவாக விளக்குகின்றது.

10. ஆரியருக்குச் சுரர் என்னும் ஓர்பெயர் இருப்பதால் அது இடுகுறிப்பெயரோ காரணப்பெயரோவெனப் பரிபாலோசிக்குமிடத்துக் காரணப்பெயராகவே இருக்கிறது. எவ்வாறெனின், சுரர் என்னுமொழியின் பொருள் சுராசம்பந்தமுடையவரெனப் புலப்படுகின்றது. சுரா என்பது கள், மது என்னப்பட்ட பலபொருள் குறித்த ஒரு மொழி. ஆதலால் சுரர் என்பதற்குக் கட்குடியரென்பதே பொருளாம். சுரரல்லாதவர் அசுரராதலால், அசுரரென்னும் மொழியின் பொருள் சுரா சம்பந்தமில்லாதவர்; அதாவது கட்குடியாதவர் எனப் பொருள்படுகின்றது. இவ்வாருக சுரர் அசுரர் என்னும் இவ்விருவகுப்பினருள் சுரரெனப்படுவோராகிய அவ்வாரியரால் அசுரரென அழைக்கப்பட்டவர்கள் இவ்விந்துதேசக் குடிகளேயாதலால் இத்தேசக் குடிகள் மதுபானஞ் செய்யாதவர்களென்றே பூர்வபட்சமாய் விளக்குகின்றது. ஆகையால் ஆரியர் இத்தேசம் வருவதற்குமுன்னமே இத்தேசக் குடிகள் மதுபானஞ் செய்யாமல் இருந்தமையால் இந்துக்கள் பூர்வந்தொட்டு நாகரிகமுடையவர்களாயிருந்தனரென்பதற்குச் சிறிதேனும் ஐயமில்லை.

11. மக்கட் குழாங்களுள் வஞ்சநெஞ்சமுடையோரும், வருந்தி முயன்று பிழைக்க வகையறியாத பெருஞ்சோம்பேறிகளும் அயலவர்களுடைய கஷ்டார்ஜிதங்களை வஞ்சனைகளால் அபகரித்து ஜீவிக்கவும் அவ்வயலார்களால் பெருமையடையவுமே பூலோகத்தில் கட்டுக்கதைகளைக் கற்பித்து பொய்நூல்கள் யாவும் எழுதப்பட்டன. இங்ஙனம் எழுதி பிரஜைகளை வஞ்சித்துப் பிழைக்கும் பிழைப்பு மிலேச்சருக்குரிய தன்மையேயன்றி வேறன்று. இத்தகைய வஞ்சப் பொய்க்கதைகளே பொதிந்துள்ள மனுஸ்மிருதி, புராணம், சோதிடம், சதுர்வேதம் முதலிய வஞ்ச நூல்களைப் புனைந்துரைத்து (Mythology) அவற்றால் இதுகாறும் வஞ்சித்தவரும் ஆரியர்போல் இவ்விந்துதேசத்தவர் வஞ்சக நூல்களை மறந்தும் செய்யாது, நீதிசாஸ்திரம் தர்க்கசாஸ்திரம், கணிதசாஸ்திரம், தாவரவர்க்க சாஸ்திரம், பாகசாஸ்திரம், சங்கீதசாஸ்திரம் முதலிய உண்மையும் பயனுள்ளதுமான நூல்களை எழுதி மக்களுடைய அறிவு அபிவிருத்தியடையும்படியே செய்தமையால் இவ்விந்துக்களே அவ்வாரியரினும் நாகரீகமுடையவர்களென்று தெளிவாக விளங்குகின்றது. ஆரியர் இத்தேசம்வந்து சேராத நெடுங்காலத்திற்குமுன்னமே சீனதேசத்தார் நீங்கலாக ஏனைய எல்லாத்தேசத்தாரினும் இத்தேசத்தவர்களே ஆகாயத்தையளாவிய கோபுரங்களையுடைய கட்டடங்களைக் கட்டுவதிலும், கருங்கற்களில் கொத்துவேலை செய்வதாகிய சிற்பத்தொழிலிலும், படமெழுதுவதிலும், நவரத்தினங்களைத் தங்கத்துடன் சேர்த்துப் பலவித ஆபரணங்கள் செய்வதிலும், பட்டு. பருத்தி இவைகளால் விதம்விதமான ஆடைகள் நெய்வதிலும், அவ்வாடைகளுக்கு விதம் விதமான சாயமூட்டுவதிலும் செம்பு, பித்தளை முதலியவைகளை உருக்கி விக்கிரகங்கள் வார்ப்பதிலும், சந்தனமரம் தந்தமாகிய இவற்றில் கொத்துவேலைபுரிவதிலும், மாமரப்பலகையின்மீது அரக்கை யுருக்கியூற்றி அவ்வரக்கின்மீது கொத்துவேலை செய்வதிலும், விநோதம் விநோதமான ஆட்டங்கள்

(Circus) ஆடுவதிலும் தேர்ச்சியுள்ளவர்களாக இருந்ததனால் ஆரியர் இத்தேசத்தில் குடியேறுவதற்கு நெடுங்காலத்திற்கு முன் தொடங்கியே இத்தேசப் பூர்வக்குடிகள் நாகரிகமடைந்திருந்தனரென்று தெளிவாக விளங்குகின்றது.

12. மனித உணர்ச்சிக்குரிய பிரதான அடையாளங்கள் உருவடையாளமெனவும், உணர்வடையாளமெனவும், ஒலிவடிவடையாளமெனவும், வரிவடிவடையாளமெனவும் நான்கு வகைப்படும். இவற்றுள் சிலர் ரூபங்களும், படங்களும் உருவடையாளமெனவும், மகோதரத்தைப்போல இருப்பனவற்றை உணர்த்த ஏற்படுத்திய குறிப்படையாளங்கள் உணர்வடையாளமெனவும், செவிப்புலனால்மட்டும் அறியத்தக்கது ஒலிவடிவடையாளமெனவும், செவிப்புலனால் அறியத்தக்கதைக் கட்புலனாகச் செய்வது வரிவடிவடையாளமெனவும், சிற்பநூலாசிரியர் கூறுவர். லிங்கமதஸ்தினரும் துர்க்கைமதஸ்தினருமாகிய பூர்வ இந்துக்கள், மேலைய நால்வகை அடையாளங்களுள் ஒலிவடிவு நீங்கலாக ஏனைய மூவகை அடையாளங்களையும் கோவிலாக இருக்கும் சமாதிச் சுவர்களிலும், கற்கம்பங்களிலும், மண்டபங்களிலும், நெடுங்காலம் நிலைபெற்று விளங்கும்படியாக அவற்றில் அமைத்து வைத்தனர். ஒலிவடிவடையாளம் வாயினின்றெழுந் தன்மையுடையதாதலால் அதைமட்டும் சமாதிகளில் காணக்கூடாது. காளிமுதலிய தேவதா சிலா ரூபங்கள் உருவடையாளத்திற்கும், ஆண்பெண் குறிகளான லிங்கமும் ஆவுடையாரும் உணர்வடையாளத்திற்கும், தற்காலத்தில் தேவாலயங்களாக எண்ணி வழிபடப்பட்டுவரும் பிரேதாலயச் சுவர்களில் எழுதப்பட்டிருக்கும் சாசனம் முதலியவை வரிவடிவடையாளத்திற்கும், உதாரணங்களாக அச்சமாதிகளில் அமைந்துகிடக்கின்றன.

13. கைம்மாதரான க்ஷத்திரியகுல இராஜபத்தினிகள் ஆரியரது போதனையினால் தங்கள் கணவர்கள் சம்பாதித்த நகை நட்டு திரவியமனைத்தையும் ஆரியருக்கே தானஞ்

செய்து அதன்பின் மரித்த தங்கள் கணவர்களுடன் உடன் கட்டை யேறினவர்கள் வெந்தெரிந்து சாம்பரான இடங் களின்மீது ஆரியர் அவர்கள் புத்திரர்களைக்கொண்டு சமாதி ஆலயங்களைக் கட்டுவித்தனர். அங்ஙனங் கட்டுவிக்கப் பட்டுள்ள ஆலயங்கள் 1116 இருக்கின்றன. அவ்வாலயங் கள் அனைத்தும் ஆரியரின் முறைப்படி கட்டுவிக்கப்படாமல், டியூரேனிய முறைப்படி கட்டுவிக்கப்பட்டிருப்பதால், இந் துக்கள் பூர்வகாலந்தொடங்கி கல்வியும், செல்வமும், நாக ரீகமும் உடையவராயிருந்தனரென்றும், ஆரியர் வந்ததன் பின்னரே தங்கள் சிறப்பையுஞ், செல்வத்தையும், நாகரீகத் தையும் ஒருங்கே இழந்து சீரழிந்தனரென்றும் தெளிவாக விளங்குகின்றது. இவ்வாறு இந்துக்கள் சீரழிவதற்குக் காரணமாயுள்ள இவ்வாரியரின் கொடியகபவஞ்சகத்தைக் குறித்து முப்புரிநூலில் "பாப்புப் பெருத்ததல்லவோ சமஸ் தானங்கள் பாழ்பட்டவே" என்று பண்டைக்காலத்து ஓர் வித்துவான் பாடிய பாட்டினாலும், பிராமணர்களால் சமஸ்தானங்களெல்லாம் அழிந்தனவென்று தெளிவாக விளங்குகிறது.

14. ஆரியர் இத்தேசத்திற்கு வருவதற்குமுன் இத் தேச மாதர்கள் புருஷரினும் இழிந்தோராக எண்ணப்படா மல் புருஷருக்குச் சமானஸ்தராகவே கருதப்பட்டு வந்தனர். மகமதியரின் வரவுக்குமுன் இத்தேச மாதருக்குள் அந்தப் புரமென்னும் கோஷா ஏற்பாடு இருந்ததில்லை. இம்மாதர் தங்கணவரை இழந்து கைம்பெண்ணுவரோயாயின் அவர் தம் கொழுந்தனுக்கு மனைவியாய் வந்தனர். ஆண் பெண்ணு கிய இருபாலருக்குள்ளும் பூர்வகாலத்தில் புநர்விவாகம் புரிந்துகொள்ளுவது வழக்கமாயிருந்தது. இவ்வனுஷ்டா னங்களில், கைக்கோளர், குறவர், இருளர், சான்றார், பறை யர், பள்ளர் முதலிய ஜாதியாருள் பெரும்பான்மையோர் தவிர சிறுபான்மையரும் மற்றைய ஜாதியார் அனைவரும் ஆரியரது போதனைகளால் மாதர்களின் புநர்விவாகத்தை மட்டும் நிக்கிரகித்துவிட்டனர். இத்தேசக் கன்னிகைகள்

எந்தப் புருஷர்மேல் இஷ்டப்படுவார்களோ அவர்களுக்கே அக்கன்னிகைகளை விவாகஞ்செய்துகொடுப்பது இத்தேச பூர்வகுடிகளின் வழக்கம். இதற்கே சுயம்வரம் என்று பெயர். இதற்கு மேற்கோள், விஷ்ணுபுராணத்தில் மாந்தாதா என்னும் அரசன் சௌபரிமுனிவரை நோக்கி, “சௌபரிமுனிவரே, எங்கள் பெண்கள் எவர்கள்மேல் இஷ்டப்படுவார்களோ அவர்களுக்கே அப்பெண்களை விவாகஞ்செய்துகொடுப்பது எங்கள் குலாசாரம்” என்றான். நைடதம் சுயம்வரப்படலத்தில், தமயந்தி சுயம்வரமண்டபத்திற்குச் சென்று தனக்கு இஷ்டமுள்ளவனான நளமகாராஜனுக்கு மாலையிட்டதாகக் கூறியுள்ளது. இவ்வாறே திரௌபதையும், காசிராஜாவின் புத்திரிகளாகிய அம்பிகை, அம்பாலிகை என்ற இராஜபுத்திரிகளும், மற்ற எல்லா வகுப்பு ஸ்திரீகளும் தங்களுக்குத் தகுந்த வயதுவந்தபின் தாங்களிஷ்டப்பட்ட புருஷனையே தங்களுக்குக் கணவராக எண்ணி அவர்களுக்கு மணமாலை இட்டுவந்தனர். இதன்றி, லீலாவதி, ஔவை, காரைக்காலம்மை, தமிழறியும் பெருமாள், பாண்டியன் மனைவி, உப்பை முதலிய மாதர்கள் கல்வியில் நன்கு பயின்றவர்களாக இருந்தனர். பூர்வகாலத்தில் அல்லி அரசாணி என்ற மாதும், பவழக்கொடி என்ற மாதும், இன்னும் அனந்தமாதர்களும் ஆண்மக்களைப்போலவே இத்தேசத்தின் பலவிடங்களில் அரசாண்டதாக இதிகாசங்களினால் தெரியவருவதுமன்றி, மலையாளத்தில் நாளதுவரையில் இராச்சிய உரிமை ஆண்பால்வழிக்குச் செல்லாமல் பெண்பால்வழிக்கு உரித்தாகி ‘அம்மான் சொத்திற்கு மருமகன் கர்த்தா’ என்று அவர்களுக்குள் நியாயப்பிரமாணம் ஏற்பட்டு, ஆஸ்தி பெண்பால் வழியில் சென்றுவருகின்றது. ஆரியர் இத்தேசம் வருவதன்முன் இத்தேசத்தவர் யாவருக்குள்ளும் தாய் தந்தைகளின் ஆஸ்தியில் புத்திரருக்கும் புத்திரிகளுக்கும் சமபாகமான பாத்தியமிருந்தது. இவற்றால் ஆரியர் இத்தேசம்வந்து சேர்வதன்முன் இத்தேசமாதர் இராச்சிய

புரிஞ்செய்யுஞ் சுதந்தரமும் பெற்றிருந்தனரென்றும், ஆரியர் இங்குவந்து சேர்ந்தபின்னரோ சர்வ சுதந்தரங்களையும் சிறப்பையுமிழந்து ஆண்மக்களினும் இழிவுடையரென்றும், தேவ வழிபாட்டிற்கு அருகரல்லரென்றும், அவர்கள் விதவையாகச் சம்பவிக்கின் புநர்விவாகஞ் செய்துகொள்ளாது உடன்கட்டை யேறல் வேண்டுமென்றும், ஆரியர் ஏற்படுத்தி அவர்களை மிகு இழிவுபடுத்தி வந்தமையால், அவர்கள் வரவர அறிவு குன்றி அறிவீனராய் விட்டனர்.

15. நாணயநிர்ணய சாஸ்திர (Numismatology)த்தில் இத்தேசப் பூர்வ நாணயங்களுள் அநேக நாணயங்களின் விவரமும், அந்நாணயங்களில் அமைந்துள்ள படங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. அந்நாணயக் காசுகளுள் சிலகாசுகளில் காளி சிங்கவாகனத்தின்மீது ஆரோகணித்திருக்கும் பாவனை அமைந்திருப்பதாக எழுதப்பட்டிருக்கிறது. இதனால் வீரபராக்கிரமம் பொருந்திய காளியென்ற மாது நெடுங்காலத்திற்குமுன் இத்தேசத்தின் பலவிடங்களை வென்று இராஜரீகஞ்செய்து வந்தனரென்றும், அவர் மரித்தபின் பூர்வ வழக்கத்தின்படி பராக்கிரமத்துடன் அரசாண்ட அவரை அவரது பராக்கிரமத்தைக் குறிப்பிக்க அவரது பின்சந்ததியார் மிருகேந்திரனாகிய சிங்கத்தை அவளுக்கு வாகனமாக ஏற்படுத்தி வணங்கிவந்தனரென்றும் விளங்குகிறது. ஆகையால் காளி இத்தேசத்தவரின் தெய்வமேயன்றி ஆரியரின் தெய்வமன்று. மேலைய நாணயக்காசுகளிலுள்ள முத்திரைகளால் இத்தேசத்தவர்கள் ஆரியர் இத்தேசம் வந்து சேர்வதன்முன்னரோ நாகரீகமடைந்து இராஜரீகம்செலுத்தி வந்தனரென்று தெளிவாக விளங்குகிறது. (காளிகோவிலுக்கு அளவிறந்த திரவியம் இத்தேசத்தவரால் வருவதைக்கண்ட ஆரியர் அத்திரவியங்களைத் தாங்கள் அபகரிக்கக்கருதி அக்காளியைப்பற்றிச் சிலவாக்கியங்களைத் தங்கள்வேதாகமங்களில் எழுதிக்கொண்டு, அதை இவரிடங்காண்பித்து,அக்காளியைத் தாங்களும் வணங்குவதாகச் சொல்லி, வஞ்சித்து அவ்வாலயங்களைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டனர்).

16. இந்துக்களின் நூல்களுள் ஒன்றிலேனும் ஆரிய மதத்தைக் கண்டித்து எழுதப்பட்டிருக்கவில்லை; ஆனால், ஆரிய வேதாகமங்களிலோவெனில், இந்துமதங்களை இழிவுபடுத்தி எழுதியிருப்பதோடு இந்துக்களை ஆரியர் பகைத்து, அவர்களை வெல்ல ஆரியர் அவர்களுடன் யுத்தஞ்செய்துவந்ததாகவும்,[*] இத்தேசப் பூர்வகுடிகளும்,[*] அவர்கள் ஆடுமாடுகளும் நாசமடைந்து போகவேண்டுமென்றும், பூர்வகால ஆரியர் தங்கள் கடவுளைப் பிரார்த்தித்ததாகவும் இருக்கு முதலிய வேதங்களாலும், இதிகாச புராணங்களாலும் தெரியவருகின்றது. இதனால் இந்து நூல்கள் எழுதப்பட்டகாலத்தில் ஆரியர் இத்தேசத்தில் இருந்ததேயில்லை என்றும், அவர் இத்தேசம்வந்து சேர்வதற்குமுன்னமே இந்துக்கள் நாகரீகமடைந்திருந்தனரென்றுந் தெளிவாக விளங்குகின்றது.

17. இந்துதேசத்திலுள்ள பெரும் சிவாலயங்களும், விஷ்ணு ஆலயங்களும் இத்தேசப் பூர்வகுடிகளாகிய டிழூரேனிய முறைப்படி கட்டப்பட்டிருப்பதாகவும், ஆரியரின் சுவாதீனத்திலிருக்கும் அவ்வாலயங்களில் இடிந்துபோனவற்றை ஆரியர் தங்கள் முறைப்படி நவீனமுறையாகக் கட்டவில்லை என்றும், பெர்கூசன் என்னும் சிற்ப சாஸ்திரி கூறியுள்ளார். இத்தேச வியாபாரச் சரக்குகள் ஐரோப்பா கண்டத்தில் மிகச் சிறப்போடு மதிக்கப்பட்டு மிகு ஏராளமாக பலதேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுவந்தன. இக்காரணத்தால் இந்துக்கள் பூர்வகாலத்தில் நாகரீகமடைந்திருந்தனரென்று ஐரோப்பா முதலான கண்டத்தவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

---

## அதிகாரம். 3.

வருணபேத முண்டென்னுங் கோட்பாடு நடுவொந்தரத்தில்செய்யப்பட்ட மனுநூலிற்கூறியிருப்பதேயன்றி, அதனை மெய்ப்படுத்தத்தக்க யாதொரு சாக்ஷியுமில்லையாதலால், அது அங்கீகரிக்கப்படத்தக்கதல்ல. அக்கோட்பாடு கடவுளால்

சமைக்கப்பட்டதெனின், மற்றையதேசத்தவர்களின் சமய நூல்களில் அதனைப்பற்றி ஓர் வாக்கியமாவது கூறியிராத தென்ன?

இந்தேசத்தவர்களின் குலாசார மதாசாரங்களின் பேதாபேதங்களையும், உத்தியோகத் தொழில்களையுங் காட்டும் "வருண" மென்னும் வடமொழி, விதம், வகை, இனம், குலம், ஜாதி, வர்க்க மென்னும் பலபொருள் சொன்னும். இது பூலோகத்தில் எத்தேசத்தாராலும் வழங்கப்படாமல் இவ்விந்தியதேசத்தாரால்மட்டும் வழங்கப்படுகின்றது.

ஆரியர் பூர்வ அரசரிடத்தில் மந்திரிகளாகவும் கல்விச் சங்கத்தாராகவும் அமர்ந்து, இதிகாச மெழுதியவரால் எழுதப்பட்ட சரித்திரங்கள் அரசர்முன்பாகக் கொண்டுவரப் பட்டு அரங்கேற்றல் செய்விக்கப்படவேண்டுமென நியமித்து, முறையே கொண்டுவரப்பட்ட இதிகாசங்களில் தங்களைப் புகழ்ந்திருப்பவையை யங்கீகரிக்கச்செய்தும், தங்கள் பூர்வோத்தரங்களில் உள்ளதை உள்ளபடி எழுதி இருப்பி னவற்றை யழிக்கச்செய்ததனுலும் தங்களுக்கு முன்னிருந்த பூர்வசரித்திரங்களை ஒழிக்கச்செய்ததனுலும் இப்பரியாய தீபத்தின் பூர்வசரித்திரம் இல்லாது போயிற்று. இமயமலைக்கு வடமேற்கிலுள்ள பாரசிகக்குடிகள் தீயை வணங்குவதுபோல பிராமணர்களும் வேள்வி, யாகாதி கிருத்தியங்கள், தீபநமஸ்காரம், சூரியநமஸ்காரஞ்செய்து தீயை வணங்குவதாலும்; பாரசீகரும், மகம்மதியரும் ஆத்திகருக்குள் வழங்கும் ஆன்மாவென்னும் மிசிரமற்ற தனியேக பதார்த்தம் ஆண்பாலாருக்கே யன்றி பெண்பாலாருக்கில்லையென்றும், ஆகையால், அவர்கள் வேதங்களை ஓதவும், கடவுளை வணங்கவும் படாதென்று தடுத்திருப்பதுபோல, பிராமணரும் மாதரை வேதம் ஓதுதலினின்றும், தேவ வழிபாட்டினின்றும் விலக்கி யிருப்பதாலும், அவர்களது பாஷையும், நடையுடை பாவனைகளும் இத்தேசத்தவர்களின் நடை யுடை முதலியவற்றிற்கு முற்றும் பேதப்பட்டிருப்பதாலும், ஒரு

தேசத்தினின்று மறுதேசத்தில் குடியேறி இருப்பவர்கள் அத்தேச பூர்வ குடிகளைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்துவதுபோல, பிராமணர் இத்தேசத்துப் பூர்வ குடிகளைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்தியிருப்பதாலும், மகம்மதியர் தங்கள் ஊழியங்களை இயற்றுவித்துக் கொள்ள அடிமைகளை வாங்குவதுபோலவும், விற்பதுபோலவும், ஆரியர் இத்தேச பூர்வ குடிகளிடத்தில் தங்கள் கிரியைகளை இயற்றுவித்துக் கொள்ளவும், அவர்கள் செல்வத்தைக் கிரகித்துக்கொள்ளவும் ஜாதிபேதங்களை சிருபித்திருப்பதாலும், இத்தேசத்தின் பூர்வ இதிகாசமில்லாவிடினும், மேற்கண்ட காரணங்களால் அவர்கள் இத்தேச பூர்வகுடிகளல்லவென்றும், பாரசீக தேசத்தினின்று இத்தேசத்தில் குடியேறியவர்களென்றுந் தெளிவாக விளங்குகின்றது.

அலைகடல்சூழ்ந்த இப்பூலோகத்தின்கண்ணே சிறந்து விளங்காநின்ற இத்தேசம் எக்காலத்தினுங் குறைவுபடாத நீர்வளமுள்ள கங்கை, சிந்து, யமுனை, காவேரி முதலிய பெரியதும் சிறியதுமான பல நதிகளை அடுத்தடுத்துடையதாயும், வாழை, பலா, மா, தெங்கு, கரும்பு முதலிய பல்லுள்ள பல சோலைகளையும், சண்பகம், பாதிரி முதலிய விருக்ஷங்களால் நெருங்கி வண்டுகள் பாடுகின்ற மலர்ச்சோலைகளையும், நறுமணம் வீசும் அழகிய நானாவித மலர்கள் மலர்ந்திருக்கும்செடிகளில் அம்மலர்களுக்கேற்ற பலவிதவருணங்களையுடைய சிறிய புள்ளினங்கள், காண்போரெவருங் களிக்கும்படி யம்மலர்களில் ஒழுகும் மதுரத்தை அருந்த அருமேதையங்களில் மலர்கள்தோறும் பரந்துதிரியும் வண்டினங்களையுடைய நந்தனவனங்களையும், தாமரைத்தடாகங்களையும், நீர் நிறைந்து அல்லி நீலம் முதலிய புட்பங்கள் மலர்கின்ற ஓடைகளையும், ஏரி குளம் முதலிய பல நீர்நிலைகளையும் செந்நெல் முதலிய பலவித பயிர்கள் மாரும் முப்போகமும் விளைகின்ற குறைவற்ற விளைவையுடைய புலன்களையும், அரசமண்டபங்கள், விசித்திரமண்டபங்கள், வினோதமண்டபங்கள், சித்திரமண்டபங்கள், நியாயஸ்தலங்கள்,

கல்விச்சாலைகள், பாடசாலைகள், ஆயுதசாலைகள், சிலம்பக்கூடங்களு முடையதாய் எத்தேசத்திலும் இதுவே சிறந்ததென்று விளங்கிய இக்கண்டத்தின் வடகோடியிலுள்ள பஞ்சாப் மாகாணத்தில் ஊடுருவிச்செல்லும் சிந்துநதிவரையில் வந்துபோன பூர்வ இதிகாசமெழுதிய ஹெரோடெட்சுக்கும், இதனை யாண்டுவந்த சந்திரகுப்த னென்னும் சக்கரவர்த்திக்கு முன்னும், அறமுறை வழுவாது செங்கோல் நடாத்திவந்த பௌத்தமதமரபில் தோன்றிய பரதேசுபரனென்னும் சக்கரவர்த்திக்கு சுமார் ௩௦௦௦-வருஷங்களுக்குமுன் மகாதபசியாகிய விருஷபதீர்த்தங்கருடைய காலத்தில் தன்னாணையைச்செலுத்தி சத்துருக்களை நாசஞ்செய்த சான்றோருக்குத் துணைபுரிந்துவந்தார். அப்போது இந்தியாவின் வடமேற்கிலுள்ள பாரசீகக்குடிகள், தங்கள் தேசத்திலுண்டான பஞ்சத்தால் அந்நவஸ்திராதிகளுக்கு வருவழியின்றி வருந்தியிருக்கையில் கீழ்க்கண்டமாகிய இவ்விந்துதேசத்தை வந்து பார்க்க, இது சகல சுகானுபவங்களிலுங் குறைவற அமைந்திருப்பதுமன்றி இத்திசைக்குடிகளில் பெரும்பான்மையோர், என்பு பலகறை முதலியவற்றை ஆபரணங்களாக அணிந்தும், தோல், இலை, மரப்பட்டைகளை ஆடைகளாக உடுத்தியும், பலவித பாஷைகளைப்பேசியும், நானாவித மாம்சாதிகளைப் பாகஞ்செய்யாதுண்டும்வந்ததைக்கண்ட அப்பாரசீகர் களிப்புற்று, முதலில் சிந்துநதிவரையில் குடிபுகுந்து பின்பு கங்காநதியோரமுழுவதும் வியாபித்தார்கள்.

பூர்வகாலத்தில் ஆரியரோ வானசாஸ்திரம் தெரிந்தவர்களாயும் இத்தேசத்தவர்கள் அச்சாஸ்திரம் சிறிதெனினும் தெரியாதவர்களாயும் இருந்ததனால் அவர்கள் இத்தேசமன்னவரிடத்தும் பிரஜைகளிடத்தும் எதிர்காலத்தில் சம்பவிக்கும் சூரிய சந்திர கிரகணங்களைப்பற்றி முன்னறிவித்து அவ்வாறே சூரிய சந்திராதிகள் மறைபட்டுப்போவதைக் காண்பித்து அதிசயிக்கும்படிச்செய்து தங்களிடத்தில் என்றுமில்லாத மதிப்பையும், கௌரவத்தையும், அச்சத்தையும் வருவித்துக்கொண்டபின், ஆகாயவீதியில் தோற்

னும் வியாழன் முதலிய கிரகங்கள் தங்கள் சுயகுலத்தைச் சேர்ந்த பிராமணர்களெனவும், அவர்கள் கடவுள்தயவை அதிகமாகப்பெற்றதனால் சுடரொளி தேகத்தைப் பெற்று நக்ஷத்திரமண்டலத்தில் கிரகங்களாக உயர்த்தப்பட்டார்களெனவும், அக்கிரகங்களின் சுயகுலத்தவர்களான தங்களால் செய்யப்படும் கிரியைகளை அக்கிரகங்கள் அங்கீகரித்துக்கொண்டு தங்கள் வேண்டுதலை அளிக்கின்றனவெனவுமொழிந்து, மாந்தருக்கு நேரிடும் மனவருத்தம், பிணியாதிகளை நிவர்த்திக்க நவக்கிரக சாந்தி முதலிய கிரியைகளைத் தங்களைக்கொண்டு செய்விக்கப்படவேண்டுமெனவும், மந்திரவல்லமையினாலும், யாகாதிகிருத்தியங்களினாலும் மழை பெய்விக்கத் தங்களுக்கு வல்லமை இருக்கிறதெனவுமொழிந்து, முறையே தங்களைக்கொண்டு செய்வித்தும், இறந்தோர் ஆன்மா மிகுந்த பசியால் வருத்தமடைந்திருக்குமெனவும், அவற்றின் பசியைத் தணிக்கப் பிராமணரைத்தவிர மற்றொருவராலு மாகாதெனவு மொழிந்து தங்களைக்கொண்டு அப்பசியைத் தணிக்கச் சாச்சடங்காகிய தர்ப்பணம் செய்விக்கப்படவேண்டுமெனவும், யாகத்தால் வேந்தர்குலமரபினருக்குப் புத்திரபலனும், வெற்றிச்சிறப்பும் உண்டாகுமென வேந்தருக்கு ஆசைவார்த்தைகளூட்டி, தங்களைக்கொண்டே அக்கிருத்தியங்கள் செய்விக்கப்படவேண்டுமெனவும், தங்களுக்குப்பின் அக்கிருத்தியங்களை இயற்றுவிக்கத் தங்கள் புத்திரர் பௌத்திரர்களே பரம்பரை முறையாக வரவேண்டுமெனவும் நியமித்து, யாகசாலைக்கு வேதியரும், வேந்தரும் வித்தியாசமின்றிவந்து, ஒன்றுசேர்ந்து, ஒருபந்தியில்கலந்துண்பதனால் தீட்டென்று எண்ணாது உண்டுவந்ததுமன்றி, க்ஷத்திரியபுத்திரிகளை மணந்தும் க்ஷத்திரியமன்னர் மனைகளிலும், யாகசாலைகளிலும் பாகஞ்செய்யும் நவநவமான மாம்சாதிகளையுண்டுவந்தும், தூதர்களாக ஸ்தானபத்தியம்போயும், தூரதிருஷ்டி சக்த்தி உடையவர்கள் போல் பின்நடப்பவைகளை முன்குறிப்பிக்கும் சோதிடத்தையும், சுபச அபசகுனங்களை உணர்த்துதலென்று பகரும்

சகுனங்களையும் தங்களைக் கொண்டு தெரிந்துகொள்ள வேண்டுமெனவும், புத்திரசந்தானமில்லாதவர்கள் தங்கள் ஆரியகுருக்களைக்கொண்டு செய்வித்துக்கொள்ளலாமெனவும் விதித்து, அவ்வாறே தசரதன் முதலிய மகுடவர்த்தனர்களின் பட்டபஸ்திரீகளுடன் புணர்ந்தும், கணவனை இழந்த க்ஷத்திரிய வைசிய சூத்திர விதவைஸ்திரீகள் தாங்கள் அணிந்திருக்கும் ஆபரணங்கள் அனைத்தையும் பிராமணருக்குத் தானஞ்செய்து, இறந்த தங்கள் கணவருடன் உடன்கட்டை ஏறுபவர்க்கும், அவர்பொருட்டு அக்குடும்பத்தாரனைவருக்கும் மோக்ஷங்கிடைக்குமென் றேற்படுத்தியும் அவ்வாறே அவர்கள் அணிந்திருக்கும் ஆபரணங்கள் அனைத்தையுங் கிரகித்து, அவர்களைத் துடிக்கப்பதைக்கத் தீயிற்பாய்ந்து உயிருடன் வெந்தெரிந்து சாம்பராகும்படிச் செய்தும், வியாதியில் வருந்தும் க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் தங்கள் மனைவிமக்களுடன் திருப்பதிக்குச்சென்று சிரமுண்டிதஞ் செய்வித்துக்கொண்டு காணிக்கைசெலுத்தில், அவர்கள் வியாதி சொஸ்தப்படுமென பிராமணர் வதந்திபிறப்பித்து, முறையே அதனை நம்பிவருபவர்களைச் சிரமுண்டிதஞ் செய்வித்துக்கொள்ளச்செய்து, அவர்கள் கொண்டுவந்த காணிக்கையையும், அவர்கள் அணிந்திருக்கும் மங்கிலிய முதல் சமஸ்தவெள்ளி பொன்னுபரணங்களையுந் தங்களுக்கு முன்னிலைச்சுட்டாக இருக்கும் அவ்வாலய தெய்வத்திற்குச் சமர்ப்பிக்கச்செய்தும், கொச்சி திருவாங்கூர் முதலிய மலையாள மாகாணங்களில் நம்பூரிகளாகிய அப்பிரதேச பிராமணர் "அறுபத்துநான்குவகை சையோகபேதங்கள் முற்று மறிந்த கன்னிகைகளே சிறந்தவர்கள்" என வதந்திபிறப்பித்து அவ்வாறே உயர்குலத்திலுதிக்கும் செல்வக்கன்னிகைகளை அவர்கள் பெற்றோரால் சம்பளமும் வெகுமதியும்பெற்று, ருதுவதியாவதற்குமுன்னமே அக் குலமகளிருக்குச் சையோக விதங்கள் கற்பிப்பவர்களைப்போல் அவர்களைச் சையோகித்தும், அத்தேச எக்குல மகளிரும் பிராமணர் தங்களை இச்சித்துத் தங்களை ஆலிங்

கனம்புரியவரில், அம்மாதர் தங்கள் கணவருடன் சயனித்துக்கொண்டிருப்பினும் அக்கணவரை அப்புறப்படுத்தி, வந்த பிராமணனின் காதலை நிவர்த்தித்து அவர் சென்றபின் தங்கள் நாயகருடன் சயனிக்கவேண்டுமென ஓர் ஏற்பாடும் ஏற்படுத்தி அவ்வாறே அம்மாதலரைப்புணர்ந்தும் இவ்வாறு தங்கள் எண்ணத்தைப் பலவாற்றானும் நிறைவேற்றினார்கள்.

இராமன், கிருஷ்ணன், முதலிய குருநிலமன்னர்களையடுத்து நீங்கள் எங்கள் ஜீவனுள்ளவரையில் எங்களைக் கடவுளைப்போலெண்ணி கடவுளுக்குச் செலுத்தும் வழிபாடனைத்தையும் எங்களுக்குச்செலுத்தி வேண்டியபொருளை எங்களுக்குத் தந்துவருவீர்களானால், நீங்கள் இறந்தபின் உங்கள் உடலைக்ஷேமித்த இடத்தின்மீது உங்கள்பெயரால் ஆலயங்கட்டுவித்து உங்களை நாங்கள் கடவுளாக எண்ணி வணங்குகிறோமென மொழிந்து, அவ்வரசர் ஜீவித்திருக்கும் வரையில் எண்ணிறந்தபிராமணர்கள் அவ்வரசரைச்சூழ்ந்து, விலாப்புடைக்க உண்டு உடுத்து வந்தார்கள். அவ்வரசர் இறந்தபின் அவர்கள் மைந்தரைக்கொண்டு முறையே ஆலயஞ் சமைப்பிக்கச்செய்து, இவரோ பிரத்தியக்ஷமான தேவதை என வதந்தி பிறப்பித்து, அவர்கள்மைந்தரைக்கொண்டும், மற்றவர்களைக்கொண்டும் அக்கடவுளுக்கு விவாகமென்றும், சோபனமென்றும், காலைபோஜனமென்றும், மாலைபோஜனமென்றும், நகர்சோதனை வருகிறாரென்றும், இன்று பள்ளியறைக்குப் போகிறாரென்றும் ஏற்படுத்தி, இன்னின்னக்கிரியைகளுக்கு இன்னின்ன பதார்த்தங்கள் வேண்டுமெனவும், இவ்விவ்வளவு பொருள் காணிக்கையாகக் கொடுக்கவேண்டுமெனவும் ஏற்படுத்தி அவர்கள் பொருளைக்கிரகித்தார்கள்.

ஆரியர் தங்கள்வாக்கு அணுவுந்தவறாமல் காளடைவில் அனைத்தும் நிறைவேறுமென்று அரசர் உள்ளத்தில் வழுவான நியாயத்தால் உறுதிபிறப்பித்ததனாலே, இதம் சொல்லும் இயற்கையுள்ள ஆரியர் வாக்குறுதியை நம்பித் தங்கள்

மாதுலரையும் பொருளையும் அவர்களுக்குச் சமர்ப்பித்து, அவர்கள்வசமாகி அவர்கள் சொன்னபடி எல்லாம் ஆடினார்கள். ஆனதனால் ஆரியர் கிருஷ்ணன் முதலிய அரசர்களை தேவர்களென்றும், தெய்வப்பிறப்பென்றும், தெய்வீகத்தன்மை யுடையவர்களென்றும், அவர்கள் புரிந்த துர்க்கிரியைகள் முதலிய குற்றங்களைப் பாரதமுதலிய இதிகாசங்களில் புகழ்ந்து பேசுகிறார்கள். குலத்தினாலும் குணத்தினாலும்சிறந்து தம்நிலத்தில்வாழுங் குடிகளின் ஜீவனையும்,சொத்தையும், தம் ஜீவனெனவும், சொத்தெனவும் பாவித்து ரக்ஷிக்கும் பாக்ஷிமையுள்ளவர்களும், சிறிதாயினும் நெறிமுறைதவறாமல் தயாளசிந்தையுடன் ராஜாதிகாரம் செலுத்துபவர்களும், பிறர் சுக துக்கங்களைத் தம் சுகதுக்கம்போல எண்ணி நடப்பவர்களும், தம் மனதிற்கு ஒவ்வாதனவற்றை நாடாதவர்களுமாகிய இராவணன் இரண்யன்முதலிய பௌத்தமத பட்டவர்த்தனர்களை வரம்புகடந்த பேராசையால் நாள் ஏற ஏற, அவ்வாசை எனும் பேயின்வசப்பட்டு, அடுத்து, தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ள முயன்றார்கள். அயல் உடைமைக்குப் பேயாய்ப் பறந்து அகத்தில் ஒன்றும், புறத்தில் ஒன்றும் செய்யும் குணமுடைய இவ்வகுப்பினர் செய்த வாக்குபசாரம், மாயநட்பு, ஒப்பாச்சாரங்களால் ஆனந்தமடையாமல் இவர்களுக்கு அடிநாக்கு நஞ்சு, நுனிநாக்கு அமுதமென்று யுத்தி பூர்வமாய்க் கண்டறிந்து இவர்களைத் தமது நாட்டினின்று அப்புறப்படுத்தினார்கள். இராவணன் இரணியன் சாமான்யமானவர்களல்ல. கல்வியாதி நாகரீக ஒழுக்கங்களில் சிறந்தவர்களானதால், ஆரியர் மிடற்றினின்று உதிக்கும் சித்திரப்பேச்சுகளுக்கு மனமகிழ்ந்து ஏமாற மதிகேடர்களல்லவே. இக்காரணத்தினாலேயே ஆரியர் ஆக்கிரமித்து இவர்களை இராக்ஷதரென்றும், அரக்கரென்றும் மிகு இழிவாகப் பகர்ந்து, தமக்கு வசப்பட்ட மகுடவர்த்தனரைக்கொண்டு கெடுவினைவால் இவ்வரசரையும், அவர்கள்குடிகளையும், நகரங்களையும் அக்கினிக்கு இரையாகும்படி படுசூரணம் செய்வித்தும், கிரீடந்தரித்த சிரசில்

கந்தையும், சிறந்த நவரத்தினங்கள் இழைத்த தங்கச் சரிகைப் பட்டாடைதரித்த இடையில் கம்பளிப்புடவையும் அலங்கோலமாய்ச் சுற்றிக்கொண்டு, மலரினும் மிருதுவான அடிகள் வருந்த பாதரக்ஷையின்றி பதைத்துத் துடித்துத் திரியும்படி செய்து தங்கள் எண்ணத்தைப் பலவாற்றானும் நிறைவேற்றியபின், (மனுநூல் 21-22-23 அத்தியாயங்கள்) இமயமலை முதல் விந்தியமலை வரையிலும், யமுனாநதிமுதல் கங்காநதிவரையிலும் தங்கள் வசமாக்கி, இமயமலைமுதல் விந்தியமலை வரையில் ஆரியவர்த்தமெனவும், அவர்கள் பலங்கொண்ட இடமாகிய சிந்துநதிமுதல் சரஸ்வதியாறு வரையில் பிரமவர்த்த மெனவும், விந்தியமலைக்குத் தெற்கிலிருப்பவை யனைத்துந் தண்டகாரண்ய மெனவும், அவ் வாரண்யத்தில் ஆரியர் குடியேறலாகா தெனவும் விதித்தனர். ஆரியரினின்று இத்தேசமன்னவரும், மன்னவரினின்று ஆரியருந் தோன்றி இருப்பதைக் கருதாது, தங்கள்சுயஜாதியார் விர்த்தியான அநேகவருஷங்களுக்குப் பின் திடங்கொண்டு, பூர்வ இந்துக்களுக்குள் பக்ஷபாதமின்றி நான சமயத்தாரையுந் தற்காக்குந் தன்மையுள்ள சட்டதிட்டங்களேற்பட்டு அவனவன் தன் தன் மதநிபந்தனைகளையும் கிரியைகளையும் திண்டாட்டமின்றி அனுஷ்டித்து வரும்படி விதிக்கப்பட்டிருந்த சட்டதிட்டங்களை ஆரியர் ஒழிக்கச்செய்து, தங்கள் சட்டதிட்டங்களையே சார்ந்தொழுகும்படி சுயுத்திலும் பயத்திலும் பலவந்தஞ்செய்து தங்களுக்குக் கீழ்ப்படுத்திக்கொண்டு, தங்களை மந்திரிகளாகவும், சேனாதிபதிகளாகவும் உயர்த்தவேண்டுமென யகுடவர்த்தனர்களைக் கேட்டமைந்து எங்கும் வியாபித்துப் பரவினார்கள். இவர்கள் தங்கள் சுயகுலத்தவர்கள் விர்த்தியடைந்த அநேக நூற்றாண்டுகளுக்குப் பின்னர் நிரக்ஷரேகைக்கு அதிதொலையில் இருந்ததனால் சிவந்திருக்குந் தங்களை ஆரியரெனவும், சூரிய வெப்பத்தால் கறுத்திருக்கும் இத்தேச பூருவகுடிகளை தாசியரெனவும் இரு வகுப்பாகப் பிரித்து, இத்திசைக் குடிகளைக் கீழ்ப்படுத்தித் தாங்கள் மேன்மை

யடையக் கருதிச் சர்வதேச காலங்களிலும் மிகு பூர்வீகமா யுள்ளதெனவும், எதனிலும் சிறந்ததெனவும், இவர்கள் நாய், மாடு, குதிரை, பசுக்களை யுண்டுவந்தகாலத்திற்கு முந்தியே கொல்லாவிரதத்தைப் பெற்றதெனவும், (மநுநூல் 364-வது புறம், 105-வது சுலோகம், "அஜீகர்த்தனென்னும் முனி பசியினால் வருத்தப்பட்டு சுனச்சேபன் என்னும் தன் சொந்தப்பிள்ளையைக் கொண்டு நூறு பசுக்களைக் கொல்வித்து அவற்றின் மாம்சத்தைத் தானே விற்றார்." 106 "தருமத்தையும் அதருமத்தையும் நன்றாகவறிந்த வாமதேவர் பசியினால் கஷ்டப்பட்டுத் தன் பிராணனைக் காப்பாற்றும் பொருட்டு நாயின் மாம்சத்தைப் புசித்தார்." 107—"தவத்தில்முதிர்ந்த பரத்வாஜமகாமுனி தன் புத்திரனுடன் சிர்மானுஷியமானகாட்டில் விருது வென்னுந் தச்சனிடத்தில் அநேக பசுக்களை வாங்கித்தின்றார்." 108—"தருமாதருமங்களை யறிந்த விஸ்வாமித்திரர் பசியினால் துன்பப்பட்டு சண்டாளன் கையிலிருந்த நாயின்மாம்சத்தை வாங்கித்தின்றார்." (மனுநூல் 23-வது, சுலோகம்.) "கிருஷ்ணார்ஜ மென்னும் மானனது எந்த விடத்தில் சுபாவமாய் சஞ்சரிக்கின்றதோ அந்த விடந்தான் யாகஞ் செய்தற்குரியது. மற்ற விடம் சூத்திரர் வசிக்கும் அசுத்தமான மிலேச்ச தேசமென்று சொல்லப்படும்." 24-இப்படிப்பட்ட புண்ணிய தேசங்களை இருபிறப்பாளராகிய ஆரியர் வேறு தேசத்திற் பிறந்தவராயினும் (வேறுதேசமென்பது பாரசீகம்) வந்தடையவேண்டியது. அல்லது, சூத்திரர் ஊழியத்தொழிலை விட வேறு விருத்தியை எந்தவிடத்தில் அடையமாட்டார்களோ அந்த விடத்தில் வசிக்கத்தக்கது. (பிராமணர் தங்களுக்கு கிருஷ்ணார்ஜமென்னும் மானின் மாம்சத்தில் அதி பிரீதி எனக் குறிப்பிக்க அதன் தோலில் சிறிது துண்டித்து ஆவணியாவட்டம் அல்லது ஸ்ராவணத்தில் பூணநூலில் கட்டிக்கொள்வது மன்றி, அதன்தோலின்மீது உட்கார்ந்து ஜபதபங்கள்செய்து, தங்கள் தேவாராதனை சாமான்களை அதன்தோலால்செய்த பையில் வைத்துக் கொள்ளுகிறார்

கள்.) கௌத்தம பௌத்தரென்பவர் இரண்டு கோடியே தொண்ணூற்றுமூன்று இலட்சத்து அறுபத்தெண்ணுயிரம் எழுத்துக்களுடன் பிடகாகியமென்னும் முப்பத்திரண்டுபிரிவுகளாக எழுதிய தர்ம்மபாடா (Dhammapada) வென்னும் வேதத்தினின்றும் இவ்வேதத்திற்குப் பின் ஜொராஸ்டர் (Zoroaster) எனும் பாரசீக வேதியன் எழுதிய ஜிண்டவஸ்டா (Zendevesta) என்னும் வேதத்தினின்றுஞ் சிலவற்றை நீக்கி சிலவற்றைத் தழுவி இல்லாதன சிலவற்றை நூதனமாகச் சேர்த்து; முதலில் நவீனமாக ருக் வேதத்தை எழுதினார்கள். இச்சுயதேசத்தவரான பௌத்தமத இறைவர்களிடத்தில் அவ்வேதந் தாங்கள் கடவுளால் பெற்ற வரப்பிரசாதமெனவும், அதனை ஓதத் தாங்களே உரியவர்களெனவும் இனி இத்தேசம் தங்களால் நற்சீருக்குவர எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறதெனவு மொழிந்து, அதனை யாவரும் அங்கீகரிக்கும்படி உபாயதந்திரஞ்செய்தார்கள். அதனை யாவரும் அங்கீகரித்தபின் தாங்கள் உயர்ந்த ஜாதியாரெனவும், க்ஷத்திரியர் முதலானவர்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களெனவும், இத்தேசப் பூர்வ குடிகளைத் தொடுவதனால் தீட்டெனவுஞ் சாதித்து, இத்தேசமன்னர் முதலானவர்களுடன் கலந்திருந்த பாரசீகராகிய ஆரியர் தங்கள் சுயகுலத்தவர்களுக்குள் ஓர் சங்கங் கூடி, வேதம் ஓதுபவர்களை வேதியரெனவும், புஜபல பராக்கிரமத்தை க்ஷாத்திரத்துடன் சாதிப்பவர்களை க்ஷத்திரியரெனவும், வாணிபஞ்செய்வோரை வைசியரெனவும், மற்றையத் தொழில்களை இயற்றுவோரை சூத்திரரெனவும் வகுத்து தொழிலினாலே ஜாதி வகுப்புப்பிரித்தார்கள். மனு என்பவர் அச் சங்கத்திற்குச் சபாநாயகராக இருந்ததனால் அச்சபையில் எழுதப்பட்ட நூலுக்கு மனுதருமநூலென்று பெயரிடப்பட்டது. அம்மனுவுக்கு சுவாயம்பு, சுவாரோசிஷன், தேபஸ, சூரிய, ஞாவதன், சாக்ஷுஷன், வைவசுவதன் என்ற எழுபெயர் தவிர, வேறு எழுபெயர் உபபலமாக இருந்து உதவி புரிந்தனர்.

இவர்களுக்கும் இவர்கள் பின் சந்ததியாருக்குமே பிராமணரெனவும், வேதியரெனவும் அந்தணரெனவும் பெயராம்.

இவர்கள் பெரும்பாலும் பொருளாசையும், பொய்யும், வஞ்சனையும், தந்திரமும், தற்புகழ்ச்சியும் சுயஜாதியாரிடத்து விசுவாசமும் உள்ளவர்கள். இவர்களே இத்தேசத்தவர்களை ஐக்கிய சம்பந்தத்தினின்று கலைத்து, பலபிரிவினராகப் பிரிந்து ஒழுகும்படி செய்து, தற்கால சீர்கெட்ட நிலைமைக்குக் கொண்டுவந்தவர்கள். இவர்கள் அந்நூலில் கண்ட வண்ணம் உயர்ந்த வருணத்தாராக இருப்பதால், மற்றைய மூவினத்தவரும் வருந்தி சம்பாதிக்கும் பதார்த்தங்களில், உயர்ந்ததும் நல்லதுமான சமஸ்த பதார்த்தங்களையும் தமக்கே அளித்து, தாழ்ந்தனவற்றிலும் தங்களுக்கு வேண்டுமவ்வளவு மட்டும் எடுத்துக்கொண்டு மற்றதையும் தம்மவருக்கே அளித்துவிடவேண்டுமெனவும், கடவுளை வணங்கத் தாங்களே உரியவர்களெனவும், மற்ற மூவினத்தவரும் அக்கடவுளைத் தங்கள் முன்னிலையிலன்றி வழிபடலாகாதெனவும், தங்களைக் கடவுளாக வழிபடவேண்டுமெனவு மேற்படுத்தி போதித்து வந்தமையை, (மனுநூல் 122 சுலோகம் 'சூத்திரன் சுவர்க்கத்திற்காகவாவது, ஜீவனத்திற்காகவாவது, அல்லது, இரண்டிற்கு மாகவாவது பிராமணனையே தொழவேண்டும். இவன் பிராமணனையடுத்த சூத்திரனென்றொருவனுக்குப்பெயர்வந்தால் அதுவே அவனுக்குப்பாக்கியம். ஆதலால், பிராமணனை யுபரிசப்பதே சூத்திரனுக்கு எல்லாத் தொழிலையும்விட மேலான தருமமென்று கருமகாண்டத்தில் சொல்லியிருக்கிறது') நானாதிக்குகளிலுமுள்ள இத்தேச சனவான்கள், தனவான்கள், மன்னர், மகுடாதிபதிகள், பட்டவர்த்தனர்கள்யாவரும் ஒப்பாமல் ஆட்சேபித்ததனால், மனுநூல் எழுதிய பிராமணரும் மற்றபிராமணரும் ஒருங்குகூடி ஆலோசித்துத் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றத் தங்கள் குலத்திற்பிறந்த பரசுராமனை* மகுடவர்த்தனனாக்கினார்கள்.

---

* தன் தாயைப் படுகொலை செய்தவனும், ஜமதக்கினி புத்திரனுமாகிய பரசுராமனென்பவன் க்ஷத்திரிய வம்சத்

அவன் அகமகிழ்ந்து முகமலர்ந்து சிங்காசனத்தைப் பெற்றுக்கொண்டான். அவன் தாமரை மலர்போல் முகமும், செவிக்கினிய மொழியும், கடுவிஷங் கக்கும் அகமும், எவர் குடி கெடுத்தும் என்னென்ன துரோகஞ் செய்தும், தானுந் தன் இனத்தவருமட்டும் பெருவாழ்வு வாழும் அபிலாசமுள்ளவன். அவன் தனக்கும் மனுநூலாசிரியருக்கும் நற்சமயம் வாய்த்ததென்றெண்ணி தங்கள்சட்டதிட்டங்களுக்கு எதிர்த்து நிற்பவர்களை அமர்க்களத்திற்கு வரவழைத்து படுகொலை செய்தும், அச்சுறுத்தியும் தங்கள்சட்டதிட்டங்களில் ஓரக்ஷரமேனுந் தவறிப்போகாமல் யாவும் எழுத்தெழுத்தாக இத்தேசபூர்வகுடிகளின் அனுஷ்டானத்திற்கு வருபளவும் தங்கள் ராக்ஷசமனவலிமையால் தங்கள்கோட்பாட்டிற்குச்சிறந்த சின்னமாக வருணபேதத்தையும், தங்கள் சமயாசாரங்களையும் பின்பற்றுபவர்கள்எவர்களும் சமயச்சின்னங்களாகிய திருநீறெனும் வெண்குறியையும், நாமமென்னும் செங்குறியையும் முகத்தில் பதிந்துகொள்ளவேண்டுமெனவும், வருணபேதக் குறிகளாகிய முதலியார் நாயடு முதலிய மொழிகளையும் அவரவர் பெயர்களுக்கு இறுதியில் அழியா முத்திரையாகக் கூட்டிக்கொள்ள வேண்டுமெனவும் விதித்தனர். (மனுநூல் - சாதகர்ம்மாதி சமஸ்காரம். 30-31-32-வது அத்தியாயங்கள். "பிராமணருக்கு உதிக்குங் குழந்தைக்கு பத்து அல்லது பனிரண்டாவது தினத்தில் புண்ணியதிதியில் நல்ல முகூர்த்தத்தில் நல்லநக்ஷத்திரத்தில் நாமகரணஞ் செய்யவேண்டியது. பிராமண குழந்தைக்கு மங்களத்தையும், க்ஷத்திரிய குழந்தைக்கு பலத்தையும், வைசிய குழந்தைக்கு பொருளையும், சூத்திரக்குழந்தைக்குத் தாழ்வையும் பிராமணருக்கு அடிமையெனப் பொருள்படும் பெயரையும் இடவேண்டியது. பிராண குழந்தைக்கு ஐயர்-ஐயங்கார்-ஆசாரி என்பதையும், க்ஷத்திரிய குழந்தைக்கு ராவ்-உடையவர் என்

---

தைக் கருவறுக்க பனிரண்டுதடவை படையெடுத்து அநேகரைச் சங்கரித்தவன்.

பதையும், வைசிய குழந்தைக்கு செட்டி என்பதையும், சூத்திரக் குழந்தைக்கு முதலியார்-நாயடு-நாயக்கன், கௌண்டன்-பிள்ளை-கிராமணி என்பதையும் அவரவர் பெயர்களுக்கு இறுதியில் தொடர்மொழியாக வரவேண்டியது.") இதர ஜாதியாரையும், மதஸ்தரையும் ஜென்மப் பகையாகப் பகைத்துக் கிஞ்சித்தும் இரக்கமின்றி வருத்தும் உருகாத இருப்பு நெஞ்சுடைய இதர மதத் துவேஷிகளாகிய ஆரியர் அவ்விருமுத்திரைகளையும் பதித்துக்கொள்ள விருப்பமில்லாத பவுத்தர்களைத் தங்களுக்கு ஐக்கியப்பட்டவர்களைக்கொண்டு இவர்களையும், உடலுமுள்ளமுமெலிந்திருக்கும் மெல்லியர்களாகிய அவர்கள் ஆடவர்களையும் எவ்விதபழிபாதகமும் அறியாத அவர்கள் பசுங்குழந்தைகளையும் சிறிதுந் தயாளசிந்தையின்றித் துடிக்கப்பதைக்கக் கழுமரங்களிலேற்றியும், கற்காணங்களில் கழுத்திறுகப் பிடித் தமிழ்த்தாட்டியும், இன்னும் சொல்லிமுடியாத விதங்களால் மானிட உதிரப்பிரவாகத்தைப்பெருக்கிச் சைவவைணவசமயம் வருணபேதமென்னுமிருவித விதைகளையும் இத்தென்கண்டத்தின் பல திசாமுகங்களிலும் நாட்டி, அவை ஓங்கி வளர்ந்து தழைக்கச் செய்தார்கள். அதன்பின் பூர்வ மனுநூலுக்கு உபபலமாக வதிஷ்டர், கௌதமர், சசியபர், உசனர் அத்திரி, காத்தியாயனர், பராசரர் முதலியவர்கள் இடங்கொண்டு ஜாதிவகுப்புத் தங்களால் வகுக்கப்பட்டதாக இருக்கலாகாதெனக் கருதி, பிரம்மாவின் முகத்தினின்று பிராமணரும், புஜத்தினின்று க்ஷத்திரியரும், தொடையினின்று வைசியரும், பாதத்தினின்று சூத்திரரும் உதித்ததாக வேற்படுத்தித் தம்மவர்களாகிய பிராமணரின் ஜீவன விருத்திக்காகவே சதுர்த்தருக்குந் தனித்தனியான கிரியைகள் பிரித்தனர். அவற்றில், பிராமணருக்கு வேள்வி செய்தல், வேள்விசெய்வித்தல், வேதமோதுதல், வேதமோதுவித்தல், தானம் வாங்குதல், தானங் கொடுத்தல் என்னும் அறுவகைக் கிரியைகளையும், க்ஷத்திரியருக்கு வேதமோதுதல், வேள்வி செய்தல், தானங்கொடுத்தல், பிரஜைகளைக் காத்தல், மன அடக்கம்

என்ற ஐவகைக்கிரியைகளையும், வைசியருக்கு வேத மோது
தல், தானங்கொடுத்தல் பசுவைக்காத்தல், வாணிபஞ்செய்தல்,
வட்டிவாங்குதல், வேளாண்மைசெய்தல் எனும் அறுவகைத்
தொழில்களையும், சூத்திரருக்கு பிராமண அடிமைத்தொ
ழில் செய்வதென்னும் இழிதொழில்களையுந் தனித்தனியா
கப் பிரித்தனர். க்ஷத்திரிய-வைசியருக்குங் கற்றுக்கொடுத்து
அவர் திரவியத்தைக் கிரகிப்பதற்காகவே பிராமணர் தங்கள்
பிராமண குருவுக்குச் சிறிது பொருளளித்து வேதமோதவும்
வேள்வி செய்யவுங் கற்றுக்கொள்ளவேண்டுமெனவும், உலக
த்திலுள்ள சமஸ்தபதார்த்தங்களும் தம்பொருட்டே பிரம்
மாவினால் படைக்கப்பட்டன வெனவும் ஆகையால் அவை
எவர்களிடத்திலிருப்பினும் தங்களுக்கே பாத்தியமுள்ள
வைகளாக இருப்பதாயும் அவற்றைத் தாங்கள் தானமாக
வாங்கப்பாத்தியப்பட்டிருப்பதாயும் தங்களுக்கே சமஸ்த
ஜாதியாருந் தானங்கொடுக்கவேண்டுமெனவும் விதித்தனர்.
(பிராமணர் தானம்வாங்குவதைமட்டும் நாம் தினந்தோறுங்
கண்டுங்கேட்டும் வருவதேயன்றி, அவர்கள் தானங்கொடுப்
பதைக் கண்டதுங்கேட்டதுமில்லையே!) க்ஷத்திரியர் பிராம
ணருக்குத் திரண்டதிரவியமளித்து வேதமோதவும், வேள்வி
செய்யவுங் கற்றுக்கொள்ளவேண்டுமெனவும், தம்மவருக்கே
தானங்கொடுக்கவேண்டுமெனவும் தம்மவருக்கே ஏதுந்தீங்கு
வராவண்ணங் காக்கவேண்டுமெனவும் பிராமணஸ்திரீகளை
மட்டும் விரும்பாதிருக்க வேண்டுமெனவும் ஏற்படுத்தினர்.
வைசியர் க்ஷத்திரியரினும் திரவியக் குறைவுள்ளவர்களானத
னால் வேள்விசெய்வதை இவர்களுக்கு நிவர்த்தித்து இவர்க
ளும் பிராமணருக்குத் திரவியமளித்து வேதமோதக் கற்றுக்
கொள்ள வேண்டுமெனவும், தம்மவருக்கே தானங்கொடுக்க
வேண்டுமெனவும், பசுவைக்காப்பாற்றி அதன்பாலை பிராமண
ருக்குத் தானமாக அளித்துத் தாங்கள் ஆடு எருமை இவற்றி
ன்பாலை உண்ணவேண்டுமெனவும், வியாபாரத்தால் கிடைக்
கும் பொன் இரத்தினவகைகளை பிராமணருக்குச் சமர்ப்பித்
துத் தாங்கள் தாழ்ந்தனவற்றை எடுத்துக்கொள்ள வேண்டு

மெனவும், க்ஷத்திரியர்முதலியவர்களிடத்தினின்று நெருக்கி வட்டிபெறவேண்டுமெனவும்,வேளாண்மையால்கிடைக்கும் நெல் கோதுமை முதலிய உயர்ந்தனவற்றை பிராமணருக்குத் தானமாக அளித்துத் தாங்கள் கேழ்வரகு முதலிய தாழ்ந்தனவற்றை உண்ணவேண்டு மெனவு மேற்படுத்தினர். சூத்திரர் வறியர்களாதலால் இவர்கள் தங்களுக்கு உயர்ந்த குலத்தோராகிய மூவினத்தோருக்குரிய ஏக்கிரியையும் புரியலாகாதெனவும், மூவினத்தோருக்கும் அடிமைத்தொழில் புரியவேண்டுமெனவும், முக்கியமாக பிராமணருக்கே அடிமைத்தொழில் செய்யவேண்டுமெனவும் ஏற்படுத்தினர். கலியுக தருமநூலாசிரியராகிய பராசரரென்பவர் கிரேதாயுகத்தில் தவமே சிறந்ததென்றும், துவாபரயுகத்தில் வேள்வி உயர்ந்ததென்றும், கலியுகத்தில் தானமே சிறந்ததென்றும், அப்படிச் செய்யுந் தானம் சூத்திரருக்குச் செய்தால் செய்தத்தனைபலனும், வைசியருக்குச்செய்தால் இருமடங்கு பலனும், க்ஷத்திரியருக்குச்செய்தால் மூவத்தனை பலனும், பிராமணருக்குச்செய்தால் ஆறத்தனை பலனுங் கிடைக்குமென்றேற்படுத்தினர். (மனுநூல் - காலத்தின் கணக்கையுணர்த்தல். 92-"புருஷன் தேகமே பரிசுத்தம். அதில் நாபிக்குமேல் அதிகபரிசுத்தம். ஆகையால், அந்த பிரம்மாவின் முகம் மிகவும் பரிசுத்தமாக இருக்கிறது. பிராமணன் அந்த பிரம்மாவின் முகத்திற் பிறந்ததால் பிராமணன் நியாயமாக உயர்ந்திருக்கின்றான்." 87 "அந்த பிரம்மாவானவர் இந்த உலகத்தைக் காப்பாற்றுவதற்காகத் தன்முகம் - தோள்-தொடை—பாதம் இவற்றினின்றுமுண்டான பிரம்ம க்ஷத்திரிய-வைசிய-சூத்திர வருணத்தாருக்கு இம்மைமறுமைக்கும் உபயோகமான கருமங்களைத் தனித்தனியாக வகுத்தனர்")

இதன்பின் இவர்கள் தாங்கள் தங்கள் முன்னோரால் குடியேறலாகாதென்று தடுக்கப்பட்டிருந்த தண்டகாரண்யமெனும் விந்தியமலையின் தென்பாகத்திலும் குடியேற ஆரம்பித்து, எவரெவருக்கு எந்தெந்தமாகாணம் அல்லது கிராமங்கள் அனுகூலித்தனவோ அவரவர் அந்தந்த மாகாணம் அல்

லது கிராமத்தில் குடிபுகுந்தனர். மனுநூல். 2-வது-அத்தியாயம் 21 (இமோத்பர்வதத்திற்கும்விந்தியபர்வதத்திற்கும் நடுவாயும், ஸரஸ்வதி நதி மறைந்த விசனச தேசத்திற்குங் கிழக்காயும், பிரயாகைக்குமேற்காயும் இருக்கிறஇடமான து மத்திய தேசமென்று சொல்லப்படுகிறது. 22-கிழக்கு சமுத்திரந்தொடங்கி மேற்குசமுத்திரம் வரையில் முன்சொன்ன மலைகளின் நடுப்பிரதேசமானது சாதுக்களாகிய பிராமணர் வசிக்கிற ஆரியவர்த்த தேசமென்று சொல்லப்படுகின்றது.) எவரெவர் எந்தெந்த மாகாணம் அல்லது கிராமத்தில் குடிபுகுந்தனரோ அந்தந்த கூட்டத்தாருக்கு அந்தந்த மாகாணம் அல்லது கிராமத்தின் பெயரோ இந்நாள் வரையில் வழங்கி வருகின்றது. வடஇந்திய பிராமணருக்கு காராசியரெனவும், தென்னிந்தியபிராமணருக்கு திராவிடர் எனவும்பெயராம். காராசிய பிராமணர்-கேனோஜியர், ஸாரஸ்வாத், கோராட, அட்கல, மதில என ஐவகைப் பிரிவினராகவும், திராவிட பிராமணர்-ஆந்த்ரர், மராட்டியர், திராவிடர், கர்னாடகர், கூர்ச்சிரர் எனும் ஐவகைப்பிரிவினராகவும், இவர்களில் ஒவ்வொரு பிரிவினரும் அனந்தம் உட்பிரிவினராகவும் பிரிந்திருப்பதுமன்றி, அநேகவ் கோத்திரத்தாராகவும் பிரிந்திருக்கின்றனர். இவர்கள் கோத்திரங்களை வழுவற எடுத்துரைப்பது சாத்தியமல்ல. இவர்கள் கோத்திரங்களைப் பற்றிச் சிலர் 155 என்றும், சிலர் 39-16-9-19 என்றும் மொழிகின்றனர். ஆனால், இவர்கள் பூர்வ கோத்திரங்கள் சிறந்த எழு இருஷிகளின் பெயர்களால் வழங்கிவருகின்றன. இவர்கள் கோத்திரங்களாவன :—கசிப, பாரத்வாஜ, வசிஷ்ட, கௌதம, விஸ்வாமித்திர, ஆத்ரிய, பத்ராயண, அகஸ்திய, ஜமதக்கினி, சுவாதாத்ரகாபிச, கௌசிக, ஸ்ரீவாட்ச, பார்க்கவ, பராசர, கான்வந்த, மித்திரிய என்பவையன்றி இன்னும் அநேக இருஷிகளின் பெயர்களைக் கோத்திரங்களாக வைத்துப்பிரிந்திருக்கின்றனர். இதன்றி வைஷ்ணவ பிராமணர் தங்களில் தாங்களே வடகலை தென்கலை எனும் பிரிவினையை உண்டாக்கிக் கொண்டு பிரிந்திருக்கின்றனர். இவ்வாறே மற்ற ஜாதியாருக்குள்ளும் வலங்கை இடங்கை எனும் பிரிவினையை உண்

டாக்கி ஒருவரையொருவர் பகைக்கச் செய்து, பொய்யை மெய்யென்றும், மெய்யைப்பொய்யென்றும் பகருந் தங்கள் கொள்கையை இத்தேசமெங்கும்வியாபிக்கும்படி செய்தபின் தங்களுக்கு ஐக்கப்பட்டிருந்த அந்தக்ஷத்திரியரையே அழிக்க பிராமணர் அனந்த பிரயத்தனங்கள் செய்ததனால், இத்தேச பூருவபிரஜைகளின் உள்ளம்விக்கினத்தால் நிறைந்து, வாடிவதங்கி இருப்பதைக்கண்ட இராஜஇராஜாக்கள் கடுஞ்சினமடைந்து, அவர்களை யடக்க பல முயற்சிகள் செய்ததனால் விரோதம் முதிர்ந்து. இவர்களுக்கு இடையில் பெரும்பிளப்புண்டாய், அன்பின் கட்டுவிட்டு ஐக்கியசம்பந்தத்தின் ஆதாரம் அவிழ்ந்தது. இந்தியாவில் அப்போதப்போது ஆண்ட அதிபதிகள் இவ்விடத்திய நிஷ்கலக ஸ்திதியை நிலைநிறுத்த வல்லவர்களல்லாது போனார்கள். க்ஷத்திரிய வைசிய சூத்திரருக்கும் ஆரியருக்கும் பிணக்கு எப்பொழுதும் பற்றறாது நடந்துவந்தது. மெலிவோர் வலியாருக்குப் பலியானார்கள். வலியாராகிய ஆரியர் தம் ஆசைப்பெருக்கத்திற்கும் பக்ஷணமானார்கள்- ஆகவே, மகத்தான இராமன் முதலிய இராஜ வம்சத்தார் ஆரியருக்கு அனுகூலமாகச் சாய்ந்து, அரசுரிமைக் குரிய நெறி தவறி அபரிமிதமாகப் பெருக்கிய உதிரப்பிரவாகத்தால் பலங்குன்றி இந்துபிரஜைகளுக்குள் நேர்ந்த பெரும்பிணக்கால் ஐக்கிய சம்பந்தம் நிலையற்று அசைவுற்றது. கீழ்க்கண்டமாகிய இந்தியாவின் சீர்தேற்றத்திற்கு இவ்வாறு இடையூறு நேர்ந்ததனால், இமயமலைத் தொடர்களுக்கு வடதிசையில் சஞ்சரிக்கும் மிலேச்சராகிய மகம்மதிய கொடுங்கோன்மன்னர் இப்பரியாய தீபத்தின்மீது படையெடுத்துவந்து, இதன் அநேக பாகங்களை வென்று இத்தேசத்தவர்களைக்கீழ்ப்படுத்தி வதைத்து, உலர்த்திக்கருக்கி உதிரப்பிரவாகத்தைப் பெருக்க அனுகூலித்தது பிராமணர் தங்களால் கல்வியாதி நாகரீக ஒழுக்கங்களினின்றும், சுகாதார எதுக்களினின்றுந் தடுக்கப்பட்டிருக்கும் இத்தேசத்தவர்களின் க்ஷேமலாபங்களை நாடாது தங்கள் க்ஷேமலாபங்களையே நாடி, அம் மூர்க்கரிடத்தில் சேர்ந்து

முகமாட்டமாடி மிகு இழிவானசெய்கையால் அவர்கள் தயவைப்பெற்று, உயர்பதவியிலமர்ந்து, மகம்மதியர் இத்தேச பூர்வ குடிகளுக்குச் செய்துவரும் பெருஞ் சங்காரத்திற்கு மனஸ்தாபப்பட்டுத் தங்கள் கொடூரச்செய்கையை அவ்வளவொடு நிறுத்திவையாது இவர்களும் வதைத்துவந்ததனால் வயோதிகத்தை யடைந்த இத்தேச முதியோரும், இளையோரும், இறைவரும், வறியோரும், கற்றோரும், கல்லாதவரும், ஆடவருமாகியயாவரும் இவர்களால் தங்களுக்கு இடையறாது நேர்ந்த பெரும் உபத்திரவங்களைச் சகிக்கலாற்றாது எண்ணி எண்ணி துக்கித்து கண்ணருவிபெருகப்புலம்பி, என்று தாங்கள் இக் கயவஞ்சகரின் துரோகச்சிந்தையினின்று விடுவிக்கப்படுவோமென்று எண்ணமிட்டிருந்த ஏக்கம் முதிர்ந்து வருகிற காலத்தில், இந்தியாவின் அதி தொலைவில் வேறுபாஷைபேசி வேறுமதத்தை அனுசரித்து, வேறு தேசாசாரங்களைச் சார்ந்தொழுகும் மற்றொரு நூதனதேசத்தாராகிய மகாபிருத்தானியரின் சிங்காசனத்தைப் பிராமணர் முதல் பறையரீறாக உள்ள சமஸ்தஜாதியாரும், பெரியோர் முதல் சிறியோர்வரையிலுள்ள யாவருஞ்சூழ்ந்து, சுகத்தைப் பெருக்கி, செல்வத்தைவிர்த்திசெய்து, சமுதாயக்ஷேமத்தை முதிர்வித்து, அச்சிங்காசனநிழலில் தங்கி, சுயர்தீனமெனும் விருதுக்கொடியைக் கரத்திலேந்தி ஏக்கமற்று, அச்சமற்றிருக்கிறார்கள். விவேகிகளாகிய வெள்ளைக சங்கத்தார் ஆரியரால் உணர்த்தப்படும் வருணபேதத்தோடு பகைத்து, எதிர்த்து, அதன் வலிமையைக்குறைத்து, பிராமணமாய்கையில் அகப்பட்டு வாடிவதங்கி அழுங்கிகிடக்கும் சூத்திரர் முதலிய வகுப்பினருக்குத் தேறுதலை யூட்டத் தக்கள் பத்திரிகைகளில் "வஞ்ச நெஞ்சினராகிய பிராமணரை நீணிலத்து மாந்தர் காண்க" என விளங்கத் தீட்டி வருவதனால் இத்தேசத்தில் பிரிவினையையும், இழிவையும் நாட்டிய மனுவினது அசப்பிய வாக்கியங்களில் அனர்த்தம்மாறியும், பிராமணரிடத்தில் முன்னிருந்த மதிப்பு சிறிதுசிறிதாக அற்றும், சூத்திரர் முன்போல இழிகுலத்தாரர்க எண்ணப்படாமலும், வருணபேதம்

சீக்கிரத்தில் அழிந்து நாசமடைவதற்கு முற்சின்னமாக அந்நூலில்கண்டவண்ணமே இராது, ஒவ்வொருவகுப்பும் அனந்தம் உட்பிரிவாகப் பிரிந்தும், அவ்வருணபேதங்களைச் சாராத ஜனங்கள் உண்டாய்க்கொண்டும் வருவதுமன்றி, அவ்வழிலோர்திகளுடைய மேன்மையும், மும்முரமும் அடங்கி அவர்கள் கையிலிருந்த தீ அவிந்து, அவர்கள் வாழ்த்துதலுக்குப் பிரியப்படுவோரும், சாபத்திற்குப் பயப்படுவோரும் இல்லாதொழிந்து வருகிற இப்பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அவர்களால் கற்பிக்கப்பட்டு ஓர் இயல்பினையுடையதாய், நிலைபெற்றுப் பூரணசந்திரனைப்போல் பிரகாசித்துக்கொண்டிருந்த அசற்சமயமாகிய பிராமண சமயமும், வருணபேதமும் சென்னை லௌகிக சங்கத்தாரால் பலவாற்றானுங் கண்டிக்கப்பட்டு, வரவர வலியிழந்து, ஒளிமழுங்கி இருண்டு வருகின்றன.

---

## புனருத்தி வாக்கியங்கள்.

### மனுநூலாசிரியர்கள் சதுர்த்தருக்கும் தனித்தனியாக ஏற்படுத்திய தொழில்கள்.

I.

| | | |
|---|---|---|
| பிராமணத் தொழில்கள். | 1.—ஓதல்......... | க்ஷத்திரிய வைசியருக்குக் கற்றுக்கொடுத்து, அவர்கள் திரவியத்தைக் கிரகிப்பதற்காகவே தங்கள் பிராமணகுருவுக்குச் சிறிது பொருளளித்து வேதமோதக்கற்றுக்கொண்டு, வேதமோதவேண்டும். |
| | 2.—ஓதுவித்தல்... | க்ஷத்திரிய வைசியரிடத்தினின்று பொருள் பெற்று அவர்களுக்கு வேதம் ஓதுவிக்கவேண்டும். |
| | 3—வேள்வி, அல்லது எக்கியஞ் செய்தல்......... | க்ஷத்திரியருக்கு வேள்வி செய்வித்து அவர்கள் திரவியத்தைக் கிரகிப்பதற்காகவே தங்கள் பிராமண குருவுக்குச் சிறிது பொருளளித்து வேள்வி செய்விக்கக் கற்றுக்கொண்டு வேள்வி செய்ய வேண்டும். |
| | 4.—வேள்வி, அல்லது எக்கியஞ் செய்வித்தல்.... | க்ஷத்திரியரிடத்தினின்று பொருள் பெற்று அவர்களுக்கு வேள்வி செய்விக்க வேண்டும். |
| | 5—தானம் வாங்குதல்.......... | க்ஷத்திரிய வைசிய சூத்திரரிடத்தினின்று தானம் பெறவேண்டும். |
| | 6.—தானங் கொடுத்தல்.... ...... | தம் இனத்தவராகிய பிராமணருக்கே தானங் கொடுக்கவேண்டும். |

இவர்களுக்கிக்கட மூண்டாகில் க்ஷத்திரிய வைசிய சூத்திரருக்குரிய தொழில்களைப் புரியலாம். அக்குற்றமில்லையாம்.

தீயைவளர்த்து அதனை ஆராதிப்பது மூவகைப் பாகுபாடுடைத்தா யிருக்கின்றது. அவை எக்கியம், வேள்வி, யாகம் என்பனவாம்.

இப்போது க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களில் அநேகர், ருக் முதலிய வேதங்களையும், யாகாதி கிருத்தியங்களையும் நம்பாமலும், அவற்றிற்காகத் தங்களுக்குப் பொருளளிக்காமலும் இருப்பதைப் பிராமணர்களிற் பெரும்பாலார் கண்டு, தங்கள் வேதங்களையும், வேள்விசெய்தலையும் கைந்நெகிழவிட்டு, கிறிஸ்து வேதத்தால் பொருள் வரவு இருப்பதைக்கண்டு அதனையே அல்லும் பகலும் ஓத ஆரம்பித்தனர்.

2.

க்ஷத்திரியத் தொழில்கள்.

| | |
|---|---|
| 1.— பிரஜைகளைக் காத்தல்......... | வேதமோதும் அந்தணரை முக்கியமாகக் காக்கவேண்டும். |
| 2 —தானங் கொடுத்தல்............ | பிராமணருக்கே முக்கியமாக தானங்கொடுக்கவேண்டும். |
| 3.—வேதம் ஓதுதல்................. | பிராமணருக்குத் திரண்ட திரவியமளித்து வேதமோதக்கற்றுக்கொண்டு வேதமோதவேண்டும். |
| 4.—வேள்வி அல்லது எக்கியஞ் செய்தல்......... | பிராமணருக்குத் திரண்ட திரவியமளித்து வேள்வி செய்வித்துக்கொள்ளவேண்டும். |
| 5.—விபசார முதலியவற்றைச்செய்யாதிருத்தல்... | பிராமண ஸ்திரீகளைமட்டும் இச்சியாதிருக்கவேண்டும். |

இவர்கள் தங்களுக்கு மேற்குறித்தோராகிய பிராமணருக்குரிய தொழில்களைப்புரியலாகாது. இக்கட்டுண்டானல் வைசிய சூத்திரருக்குரிய தொழில்களைப்புரியலாம்.

இவ்விரண்டு தொழில்களையும் க்ஷத்திரியருக்கு ஏற்படுத்தாமற்போனல், இவர்களது திரவியத்தைக் கிரகிக்க ஏதுவின்மையாமெனவெண்ணி அவ்விரண்டையும் இவர்களுக்கு ஏற்படுத்தினர்.

வைசியத் தொழில்கள்.

3.

| | | |
|---|---|---|
| 1.—பசுவைக் காத்தல்............ | பசுவைக் காப்பாற்றி அதன்பாலைப் பிராமணருக்கு விற்று அல்லது தானமாகக் கொடுத்துத், தாங்கள் ஆடு எருமை இவற்றின் பாலை உண்ணவேண்டும். | இவர்கள் பிரம்மக்ஷத்திரியருக்குரியதொழில்களைப் புரியலாகாது. விருப்பமுண்டானால் க்ஷத்திரியருக்குரிய தொழில்களைப் புரியலாம். |
| 2.—தானங் கொடுத்தல்............ | பிராமணருக்கே தானங் கொடுக்கவேண்டும். | |
| 3.—வேத மோதுதல்............ | பிராமணருக்குத் திரவியமளித்து வேதமோதக் கற்றுக்கொண்டு வேதமோதவேண்டும். | |
| 4.— வியாபாரஞ் செய்தல்......... | வியாபாரத்தால் கிடைக்கும் நெல், பொன், வெள்ளி, இரத்தின வகைகளைப் பிரம்ம க்ஷத்திரியருக்கு விற்கவேண்டும். | |
| 5.—வட்டி வாங்குதல்............ | பிராமணர் தவிர மற்ற ஜாதியார்களை நெருக்கி வட்டி பெறவேண்டும். | |
| 6.— வேளாண்மை செய்தல்......... | பிராமணருக்குச் சம்பத்துகளனைத்தும் உண்டாசக்கடவது எனச் சிந்தையிற் கொண்டு, பூமியைத்திருத்தி எருவிட்டு பயிரிட வேண்டும். | |

க்ஷத்திரியரினும் வைசியர் திரவியக் குறைவுள்ளவர்களானதனுல் வேள்விசெய்வதை இவர்களுக்கு நிவர்த்தித்து வேதமோதுந்தொழிலைமட்டும் இவர்களுக்கு ஏற்படுத்தினர். வேதமோதுந் தொழிலை இவர்களுக்கு ஏற்படுத்தாமற்போனுல் இவர்கள் திரவியங்கொடார்களானதனுல் அதைமட்டும் இவர்களுக்கு ஏற்படுத்தினர்.

இவர்கள் பிரம்மக்ஷத்திரிய வைசிய
ருக்குரிய தொழில்களையும் புரிய
லாகாது. பிராமணருக்கேதக்க
த்தொழில்செய்யவேண்டியது.

4.

சூத்திரத் தொழில். { அடிமைத்தொழில், { இவர்கள் முக்கியமாக பிராமணருக்கே அடிமைத்தொழில் செய்யவேண்டும். அதமபக்ஷம் க்ஷத்திரிய வைசியர்களுக்குஞ் செய்யலாம்.

சூத்திரர் வறியரானதனால் எத்தொழிலும் அவர்களுக்கு ஏற்படுத்தவில்லை,

சுயநலத்தையே கருதும் பிராமணர், சூத்திரர்களுக்குரிய அற்பத்தொழில்களையும் பிடுங்கிவிடின் வறுமையால் வருந்தித் தமக்கும் தம்மரபினருக்கும் வழிவழி அடிமைப்பட்டொழுகுவரெனுங் கருத்தை யுட்கொண்டோராய், அன்னோர்களின் தொழில்களை விருப்பமிருக்கின் ஏனையவருணத்தவர் புரியலாமென்றும், தம்மரபினருக்குரிய தொழில்களைமாத்திரம், க்ஷத்திரியர்முதலிய மற்றை மூவினத்தவர்புரியின் தம்மவரது பிழைப்பற்றுவிடுமெனவுணர்ந்து ஒருவரும் புரியலாகாதெனவுமேற்படுத்திவிட்டனர்.

## அதிகாரம் ௪.

### தொழிலைப்பற்றிய விஷயம்.

வேதம் ஓதுபவர்களை வேதியரெனவும், க்ஷாத்திரஞ் சாதிப்பவர்களை க்ஷத்திரியரெனவும், வேளாண்மை வாணிபம் முதலியவற்றைப் புரிவோரை வைசியரெனவும், மற்றைய தொழில்களை இயற்றுவோரைச் சூத்திரரெனவும் இவ்வாறு தொழிலினாலே வருணபேதம் ஏற்படுத்தப்பட்டதெனின், இந்நாற்கிரியைகளையும் இயற்றுவோர் மற்றெல்லாதேசங்களிலுமிருக்க, அவ்விடங்களில் வருணபேதம் ஏன் ஏற்படுத்தப்படவில்லை? மேலும் வேதங்களை ஒழுங்குபடுத்தின வலைச்சியின் புத்திரராகிய வியாசரும், இந்திரலோகத்துப் பொதுமகளாகிய ஊர்வசியின் கெர்ப்பத்தினின்று உதித்த அருந்ததியென்னும் மாதை மணம்புரிந்த வசிட்ட முனியும், க்ஷத்திரியகுல மரபினருக்குச் சண்டாளச்சி கெர்ப்பத்தினின்று உதித்துத் தமது தபோபலத்தினால் திரிசங்கு மகாராஜனைத் தூலதேகத்துடனே சொர்க்கத்திற் கனுப்ப அங்ஙனமே அவன் தன் தூலதேகத்துடனே செல்ல, அச்சொர்க்கவாசிகள் மண்ணுலகினின்று இவ்விடம் வருகின்றவன் யாரெனச் சினந்து அவனைத் தலைகீழாகத் தள்ள, தள்ளுண்ட அவன் அபயம் அபயமென ஓலமிட்டுக்கொண்டு அந்தரத்தில் வருவதை நோக்கிக் கோபித்து அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் ஆகிய தேவர்களென்னும் இந்நக்ஷத்திரங்களைப் பிடுங்கித் தென்றிசையில் நாட்டித் திரிசங்கு சொர்க்கமென்னும் ஓர் நவீன சொர்க்கத்தையமைத்த விஸ்வாமித்திரரும் தொழிலினால் பிராமணரானதுபோல், சூத்திரருக்குச் சமையல் செய்யும் பிராமண சுயம்பாகிகளும், கள் விற்கும் பிராமணர்களும் சூத்திரர்களாகவேண்டுமே. மேலும் பிராமணர் மது மாம்சங்களருந்தாதிருப்பதனால் உயர்த்தப்பட்டார்களெனின், பூர்வகாலத்தில் அநேக பசுக்களைக் கொன்று விற்று ஜீவனஞ்செய்து

வந்த பிராமணகுலத்தில் தோன்றிய அஜிகர்த்தனென்னும் முனியும், நாயின் மாமிசத்தைப் புசித்த பிராமணராகிய வாமதேவரும், விருதுவென்னும் தச்சனிடத்தில் அநேக பசுக்களை விலைக்கு வாங்கியுண்ட பிராமணராகிய பரத்வாஜமகாமுனியும், சண்டாளன் வீட்டில் செத்துக்கிடந்த நாயின் மாமிசத்தைக் கேட்டு வாங்கிப்புசித்த விஸ்வாமித்திரரும் சூத்திரர்களாகவேண்டுமே. பூர்வகாலத்திலுண்டென்பார்களேயன்றி இக்காலத்திலுண்பதில்லையெனின், இக்காலத்திலும் இங்கிலாந்தினின்று செய்துவரும் பிஸ்கோத்தையும், மாட்டின் மாமிசத்தால் செய்துவரும் பானங்களையும் உண்ணுகிறார்களே. அன்றியும், மாமிசத்தின் சாரமாகிய பால், தயிர், வெண்ணெய், நெய் முதலியவற்றை உண்பதுமன்றி யாகஞ்செய்து அஸ்வம் முதலியவற்றின் ஊனையும் உண்டுவருகிறார்களே. பிராமணர் பால் கறந்துகொள்வது ஜீவவதையல்லவென்றும், மாமிசபோஜனஞ் செய்வது ஜீவவதையென்றும், பால் ஊனினத்தைச் சேர்ந்ததல்லவென்றுஞ் சொல்லின், கன்றுக்காகவே சுரக்கும் பாலை, கன்றை வஞ்சித்துக் கறந்து கொள்வதும், தங்கள் சுகத்தையேயன்றி மற்றப் பிராணிகளின் சுகத்தைக் கருதாது வனங்களில் சுயேச்சையாகத் தன்னிஷ்ட ஆகாரத்தைத் தேடி உலாவித்திரிந்து வரும் விலங்குகளைப் பிடித்துத் தங்கள் இஷ்டப்படி ஒடுக வண்டியிற் பூட்டித் தங்களைச் சுமந்து செல்லும்படி வருத்தி நடத்துவதும் ஜீவஇம்சையல்லவா? பால் கறந்துகொள்வதற்கும், சுமைகளைச் சுமப்பித்துக்கொள்வதற்கும் பிரதியாக அவற்றிற்கு வேண்டிய ஆகாரத்தை விரும்பிச் சம்பாதித்து அளிப்பது, கறந்துகொண்ட பாலுக்கும் பெற்றுக்கொண்ட வருத்தத்திற்கும் அவ்வாகாரம் பிரதியாகுவதால், அது குற்றமல்லவெனின், அவ்விலங்குகள் தங்கள் பாலையும் வருத்தத்தையும் பெற்றுக்கொண்டு தங்களுக்கு ஆகாரமளிக்கும்படி வேண்டிக்கொள்ளவில்லையே. மேலும், பால் ஊன் இனத்தைச் சேர்ந்ததுமல்ல, திரவஇனத்தைச் சேர்ந்ததுமல்லவெனின், அது பிறிதெந்த இனத்திற் சேர்ந்தது? அத

ளில் ஜீவனில்லையெனின், கோழிமுதலியவற்றின் அண்டங்களிலும் ஜீவனில்லையே! ஆகவே அவற்றினை யேன் உண்பதில்லை? ஆகையால், அமிர்தம் அவற்றின் ஆகாரத்தினளவே, அதிகரித்துங் குறைந்துமிருப்பதால், அது மாமிசத்தின் ஓர் கூறென்றும், பிராமணரும் மாமிச போஜனர்களென்றும் தெளிவாக விளங்குவதுமன்றிப் பூர்வகாலந் தொடங்கிப் பிராமணர் சோமபானமும் செய்துவருவதாக அவர்கள் வேதாகமங்களிலேயே தெளிவாகுவதால், அவ்வகுப்பினரை மட்டும போஜனத்தினால் உயர்ந்த சாதியாரென விசேஷித்துப் பேசவேண்டியதென்ன?

புளிப்புநாறுமுள்ள சிறுமாங்கொட்டையைக் காட்டி, அது மூன்று நான்கு அடி உயரம் வளர்ந்தபின் அதனை மற்றொரு மரத்துடன் ஒட்டுவதனால், அக் கனியின் நிறம், மணம், பருமன் முழுதும் மாறி வேறுபடுவதுபோல, பிராமணர் உதித்த ஐந்தாம்வயதுவரையில் சூத்திரராக இருந்து, ஆறாம் வயதில் செய்விக்கப்படும் உபநயனத்திற்குப் பின் பிராமணர்களாகிறார்களெனின், ஒட்டுமாங்கனியின் குணங்கள் யாவும் வேறுபட்டிருப்பதுபோல, சூத்திரருக்கும் உபநயனம்பெற்ற பிராமணருக்கும் புலன்பொறிகளிலும் அகக்கருவி புறக்கருவிகளிலும் ஏதேனும் பேதமிருக்கவேண்டுமே. அன்றி, ஐந்துவயதுவரையில் சூத்திரராக இருக்கும் பிராமணப்பிள்ளைகள் உபநயனத்திற்குப்பின் பிராமணராகிறார்களெனின், ஆறுவயதிற்குட்பட்ட சூத்திரப்பிள்ளைகளையும் உபநயனஞ்செய்து ஏன் பிராமணராக்குவதில்லை? பிராமணச்சிறுவர்களே உபநயனஞ்செய்து பிராமணராக்கப்படுவரெனின், அது ஜாதியபிமானமன்றோ? சூத்திரகுலத்தினராக உதித்த ஆண்பாலாருக்கு உபநயனஞ்செய்து பிரம்மகுலத்தினராக்குவதுபோல, பிராமணஸ்திரீகளுக்கு உபநயனஞ்செய்து பிரம்மகுலத்தினராக்குவதில்லையே. ஆகையால், அவர்கள் சூத்திரகுலத்தினராகவேண்டுமே. பிராமணஸ்திரீகள் உபநயனத்தினாலல்ல; பிரம்மகுலத்தினராகவே உதி

த்து, மாதருதக மாகுங்காலத்தில்மட்டும் 4-5 நாள் சூத்திர
குலத்தினராக மாறி மாதருதகமான ஐந்தாநாள் செய்யும்
ஸ்நாநத்தினால் சூத்திரத்துவம் மாறி மீளவும் பிராமணராகி
றார்களெனின், ருதுவதியான நாள்முதல் முப்பதுவருஷ
காலம் அல்லது, ஸ்திரீக்கு ௪௪-௫௦-வரைக்கும் வியக்கத்தக்க
கிரமமாய் ஒவ்வொருமாதமும் மாதருதகங் கண்டுகொண்
டேயிருக்கும். இம் முப்பதுவருஷகாலமும் நகமும் தசை
யும்போல, சூத்திரத்துவம் பிராமணஸ்திரீகளைவிட்டுப் பிரி
யாதிருக்கின்றதே. மேலும், பிரம்மகுலத்தினராகவே உதி
த்த பிராமண ஸ்திரீகளுக்குப் பாவசம்பந்தமாகிய சூத்திரத்
துவம்பற்றின தெவ்வாறு? மாதருதகமாகிய இழிவு பிரா
மண ஸ்திரீகளிடத்தில் அபின்னமாகவே இருக்கிறதெனின்,
அசுத்தமும் ஈனமும் பொருந்திய மாதருதகத்தையுடைய
பிராமணஸ்திரீகளைப் பரிசுத்த தேகத்தையுடைய பிராம
ணர் அங்கீகரித்துக்கொள்வ தெப்படி? ஆகையால், பிராம
ணர் அவர்களைத் தீண்டாமலும் அவர்கள் பாகஞ் செய்யும்
போஜனத்தை உண்ணாமலுமல்லவோ இருத்தல்வேண்டும்.
அவ்வாறின்றிப் பிராமணர்மாதரைத் தங்களுக்குச் சமப்படு
த்தியிருப்பதால், (யாதொரு பொருளின் கூறுகள் தம் முத
ற்பொருளின் இலட்சண முடையனவா யிருப்பது பிரத்தி
யக்ஷமாக இருப்பதுபோல) உபநயனத்திற்குமுன் பிராமண
ரும், மாதந்தோறும் பிராமணஸ்திரீகளும், சூத்திரர்களா
கவே இருப்பதால், அவர்களையும் சூத்திரர்களென்றே அங்கி
கரிக்கவேண்டும். அல்லவெனின், சூத்திரராகவிருக்கும் பிரா
மணஸ்திரீகளுடன் பிரம்மகுலத்தைச் சேர்ந்த பிராமணர்
சேர்ந்திருப்பதெங்ஙனம்? நீரோடு நீர் சேர்வதன்றி நெய்
சேராதே.

பருத்திநூலை முப்பிரிவாகத் திரித்து பூண்டிருக்கும் பூணு
நூலினால் உயர்த்தப்பட்டார்களெனின், வள்ளுவர், சோமு
ட்டிகள், வணிகர், கம்மாளர் முதலியவரும் பூண்டிருக்கி
றார்களே? ஆகவே, பிராமணருக்குமட்டும் பூணுநூலினால்

உயர்வு எப்படி உண்டாகும்? பிராமணர் வேதமோதுதலினால் உயர்த்தப்பட்டார்களெனின், இக்காலத்தில் பறையர் முதலிய சர்வ ஜாதியாரிலும் அநேகர் கற்றிருப்பதுமன்றிப் பிரபஸர் மாக்ஸ் மூல்லர், சர் உவில்லியம் ஜோன்ஸ் முதலியவரும், சதுர்வேதங்கள் முழுவதையுங் கற்றிருக்கின்றார்களே. “பிரம்மக்கியானந் பிராமண” என்னும் வாக்கியத்தின்படி பிரம்மக்கியான முள்ளவர்களாக இருக்கும் மற்றைய மூவினத்தவரையும் என் பிராமணரெனவும், பிரம்மக்கியான மற்றவர்களாக இருக்கும் பிராமணரைச் சூத்திரரெனவும் மொழிவதில்லை? ஆகையால், பூலோகத்திலுள்ள சமஸ்த மாந்தரும் ஏகஜாதியாராக இருக்க, இத்தேசத்தவர்கள்மட்டும் தொழிலினால் ஏற்றத்தாழ்வான நால்வகைச்சாதியாராகக் கடவுளால் வகுக்கப்பட்டார்களெனச் சாதிப்பது, தாஷ்டாந்த திருஷ்டாந்தவழுவாய்ச் சமரசப்படாததாதலின், அச்சாதனையைக்கொண்டு வருணபேத முண்டென்று சாதித்தல் கூடாது; ஆகையால், அது சாதனவழுவேயாம்.

## அதிகாரம். 5.

## ஜன்மத்தைப்பற்றிய விஷயம்.

பிரம்மாவின் முகத்தினின்று பிராமணரும், புஜத்தினின்று க்ஷத்திரியரும், தொடையினின்று வைசியரும், பாதத்தினின்று சூத்திரரும் உதித்தார்களெனின், இந்நால்வகைச்சாதியுள்ளுக்கும் உட்படாத குறவர், மறவர், இருளர், மலையர் முதலியோர் பிரம்மதேகத்தின் எப்பகுதியினின்று உதித்தவர்கள்? மேலும், மாதரினும் புருஷர் தேகமே பரிசுத்தமுடையதென்றும், அதனிலும் பிரமாவானவர் அதிகபரிசுத்தமுடையவரென்றும், அதனிலும் அவர் நாபிக்குமேலிருக்கும் சிரசு மிகவும் பரிசுத்தமுடையதென்றும் அத்தகைய சிரசினின்று பிராமணன் உதித்தமையால் அவன் சிரேஷ்டமாக உயர்ந்திருக்கிறானெனின், சமஸ்த பிராமணரும் முறையே பிரம்மாவின் சிரசினின்று உதித்து வராது அப்ப

ரம்பனையார் பறையர் முதலியவர்களைப் போலவே மானிட்டில்கடையராகிய மாதரின் அசுத்தமும் ஈனமும்பொருந்திய யோனியினின்று உதித்துவருவது பரிசுத்தமாகுமா? அப்பின் சந்ததியார் யோனியினின்று உதித்தவரினும், இதி பிராமணன் பிரம்மாவின் சிரசினின்று உதித்தமையால் யோனி சம்பந்தமான குற்றம் சூரியனைக்கண்ட பனியைப் போல் அகன்றுவிடுகிறதெனின், பாவத்தினால் யோனியினின்று உதித்த பறையர் முதலியவர்களைப்போலவே, பிராமணரும் அசுத்தமும் ஈனமும் பொருந்தியபகுதியினின்று உதித்து, பசி, தாகம், நோய், காமக்குரோதாதிகள் முதலியவற்றையும், உலக துன்பங்களையுமடைந்து இறுதியில் மரணவேதனைக்குள்ளாகி இறக்கவேண்டியதென்ன? மேலும், ஓர் அத்திமரத்தின் அடிநடுமுடியாகிய பல இடங்களில் காய்க்கும் பலகனிகளுக்குள் ஏதேனும் பேதமுண்டா? இல்லையே. அதுபோல், மாந்தர் பிரம்மதேகத்தின் பல இடங்களில் ஜனித்திருப்பினும் ஜாதிபேதம் இல்லாதிருக்கவேண்டுமே. யானை, குதிரை, மாடு, புலி முதலியவற்றின் சத்தமும், சிரசும், பாதங்களும் ஒன்றுக்கொன்று பேதப்பட்டிருப்பது போலப், பிராமணருக்கும் மற்றைய ஜாதியாருக்கும் ஏதேனும் பேதாபேதக்குறிகள் காணப்படுகின்றனவா? இல்லையே! மேலும், ஓர் ஜாதிமரத்தின் இலை, காய், பூ, பட்டை, ரசம், முணம்முதலியவை மற்றொரு ஜாதிமரத்திற்குப் பேதப்பட்டிருப்பதுபோலப் பிராமணருக்கும் சூத்திரருக்கும் என்பு, தோல், உதிரம், தசை, நிணம், மனம், புத்தி காமக்குரோதாதிகளில் ஏதேனும் பேதப்பட்டிருக்கின்றனவா? இல்லையே. ஜாதிபேதத்தைக் கடவுளே ஏற்படுத்திப் பிராமணரை உயர்ந்த வருணத்தாராக விதித்தாரெனின், கடவுளின் அபிமான புத்திரர்களாகிய பிராமணரைத் தீசுடாமலும், சர்ப்பம் கடியாமலும், சூரியவெப்பம் அவர்கள்மேல் படாமலும், மரணமும் வியாதியும் அவர்களையணுகாமலுமல்லவா இருத்தல்வேண்டும். அவ்வாறின்றி, இவையனைத்தும் மற்றைய ஜாதியாருக்கு அமைந்து நடந்தேறுவதுபோலவே

பிராமணருக்கும் அமைந்து நடந்தேறிவந்தும் அவ்வகுப்பினர்மட்டும் உயர்ந்தஜாதியாரெனச்சாதிப்பதெங்ஙனம்? அன்றியும், மாடுடனாடும், புலியுடன் பூனையும், பன்றியுடன் குதிரையுஞ் சேருமா? சேர்ந்தாலுஞ் சூலாகுமா? ஆகாதே. ஆகவே, ஜன்மத்தினால் வருணபேதம் தோன்றியதெனின், ஒருஜாதி பெண்பாலாருடன் மற்றொருஜாதி ஆண்பாலார் சேராமலுஞ் சேர்ந்தாலும் கெர்ப்பமாகாமலுமல்லவா இருத்தல்வேண்டும். மேலும், பிராமணராக இருக்கும் வசிஷ்டர் தூர்த்தஸ்திரீயின் வயிற்றினின்றும், விஸ்வாமித்திரர் சண்டாளச்சி கெர்ப்பத்தினின்றும் உதித்தார்களே! அஃதென்ன? அன்னையர்கள் எச்சாதியர்களாக விருப்பினும் தந்தையர்கள் மட்டும் பிராமணர்களாக விருப்பின், அவர்களுக்கு உதிக்கும் மைந்தரைப் பிராமணராகவே அங்கீகரிக்கவேண்டுமெனின், பிராமணர்களுக்கு விலைமாதர்கெர்ப்பத்தினின்று உதிக்கும் வேசிமக்களை ஏன் பிராமணரெனப்படுவதில்லை? மேலும், தந்தையருடைய குலத்தையே நோக்கவேண்டுமெனின், சில பிராமண விதவைஸ்திரீகள் சூத்திரர்மீது காதல்கொண்டு, அவர்கள் காம உள்ளத்தைக் கவர்ந்து மைந்தரைப் பெறுகின்றனரே! அம்மைந்தரை ஏன் பிராமணரெனப்படுவதில்லை?

மேலும், பிராமணர் மது, ஊன், அரக்கு, உப்பு, பால் இவற்றை விற்றால் அவர்களது ஜாதி தவறிவிடுமென மனு கூறியுள்ளார். ஒருஜாதி விலங்கு கிரியையினால் மற்றொரு ஜாதிவிலங்காவதை ஒருவருங் கண்டதுங் கேட்டதுமில்லையே! அதுபோல், அநேக பிராமணர் அவிழ்தக்கடைகள் வைத்துக்கொண்டு அதில் மாமிசம் பால் முதலியவற்றை விற்றுவருவதால் மனு மொழிவதுபோல அவர்கள் வேறொருஜாதியினரா யிருக்கவேண்டியதுமன்றி, அவர்கள் ஜாதி இழந்தவர்களென்று ஒருவரும் மொழிவதுமில்லையே! ஆகையால், ஜன்மத்தினால் ஏற்பட்ட வருணபேதம் உப்பு முதலியவற்றை விற்பதனால் எவ்வாறுகெடும்? கெடாதே! மாந்தர் பூர்வகர்மத்தினால் அந்தந்தஜாதியாராக உதிப்பதெனின், அது

அநுபோக பிரத்தியக்ஷ பிரமாணங்களுக்கு மாறுபட்டிருப்பதுமன்றி, கலியுகத்தில் புண்ணிய மிராதென்று, இந்த வேதாகமங்கள் முறையிடுவதால், இக்காலத்தில் பிராமணர் இல்லாதிருக்கவேண்டியதுமன்றி இப்பொழுதிருக்கும் பிராமணரனைவரும் புண்ணியஜனனமென்ப தெங்ஙனம்? அன்றியும், பிராமணர் நற்குணத்தினாலுயர்த்தப்பட்டார்களெனின், ஒருமைப்பட்டிருந்த இத்தேச பூர்வகுடிகளை ஐக்கிய சம்பந்தத்தினின்று பலவாறாகக் கலைத்து ஒருவரையொருவர் பகைக்கச்செய்ததும், பிராமணஸ்திரீகளைமட்டும் எவர்களும் இச்சிக்கலாகாதெனவும், மற்ற மூவினத்தவரின் மாதரைத் தாங்கள் சையோகிக்கலாமெனவும், தங்களுக்கே தானங்கொடுக்கவேண்டுமெனவும், தாங்களே உயர்ந்தஜாதியாரெனவும், தம்மவரில் சிறிது வாசித்திருப்பவர்களை மிகவும் புகழ்ந்து, இதர ஜாதியாரில் வாசித்திருப்பவர்கள் எவ்வளவு கலைவல்லவர்களாக இருப்பினும் அவர்களைப் பற்றி மிகு இழிவாக இகழ்வதும், தங்கள்சமயக்கோட்பாடுகளில் குற்றங்கள் இலக்ஷக்கணக்காக இருப்பினும், அவற்றைமறைத்து இதரசமயக் கோட்பாடுகளிலுள்ளகுற்றம் அற்பமாகஇருந்தாலும் அதனை பிரம்மாண்டமாக்கிப் பேசுவதும், உத்தியோகத்திலிருக்கும் இதர ஜாதியாரின் நாசத்தையே கருதி அதற்கு வேண்டிய பலமுயற்சிகள் எடுத்துக்கொள்வதும் நற்குணமாமோ? ஆகாதே! நல்லொழுக்கத்தினாலுயர்த்தப்பட்டார்களெனின் பிராமணரில் அநேகர் வேசிமார்க்கராகி அநேக கொடியவியாதிகளை யடைந்து வருவதை நாம் தினந்தோறும் பார்த்துவருவதுமன்றி, மதுபானஞ்செய்தும், இளம்பிராயமுடைய செல்வப்புத்திரர்களை வேசையர்பால் விட்டு அவ்விருவரிடத்தும் திரவியங்கிரகித்தும் வருவதால் ஒழுக்கத்தினாலும் இவர்களில் அநேகரை உயர்ந்த ஜாதியாரென அங்கீகரிப்பது எப்படி?

பிராமணர் நிறத்தினால் உயர்த்தப்பட்டார்களெனின், அவர்களிலும் சூத்திரர் சிவந்த நிறத்தையுடையவர்களாக இருப்பதுமன்றி, தென்தேச பிராமணர் அனைவரும் கரு

ண்ட நிறத்தையுடையவர்களாக இருக்கின்றனரோ. சூத்திரரைப்போலவே இருண்டிருக்கும் இவர்களைமட்டும் உயர்ந்த ஜாதியாரென அங்கீகரிப்பதெப்படி? பேசும் வசனங்களினால் உயர்த்தப்பட்டார்களெனின், அவர்கள் தங்கள் தாய் தமக்கை தங்கை தமயன் முதலியவர்களை மரியாதையின்றி வாடி போடி, வாடா போடாவென்று பறையரும் வசனியாத விதமாக வசனிப்பதால் இவ்வாறு வசனிக்கும் இவர்களை எங்ஙனம் ஜாதியி லுயர்ந்தவர்களாக அங்கீகரிப்பது? சூத்திரர் முதலியவர்கள் அசுசியுள்ளவர்களென்றும், ஆகையால் அவர்களால் தீண்டப்படும் போஜனமும் அசுசிப்படுமென்றும் அப்படி அசுசியானதைப் பிராமணர் உண்ணா திருப்பதனால் உயர்த்தப்பட்டார்களெனின், (சுசியென்பது ஸ்நானத்தினாலுண்டாவது.) ஸ்நானஞ்செய்வதற்குமுன் பிராமணரும் அசுசியுள்ளவர்களென்றும், அசுசியுள்ள பிராமணரால் தீண்டப்படுவதும் அசுசிப்படுமெனின், ஸ்நானஞ்செய்திருக்கும் சூத்திரராலும் தீண்டப்படுவது அசுசிப்படா திருக்கவேண்டுமே. ஆகவே அவற்றினை ஏன் உண்பதில்லை? மேலும், அவர்கள் உண்ணும் போஜனத்தை மற்றெவ்வகுப்பினருக்குங் காண்பியாதுண்பதனால் உயர்த்தப்பட்டார்களெனின், அப்போசன பதார்த்தங்களாகிய அரிசி, கோதுமை, நெய், பால், காய், கிழங்கு முதலியவை பறையர் முதலிய கீழ்க் குலத்தவரிடத்தினின்று பெறுவதுதானே; அவற்றில் தீட்டில்லையா? பாகஞ் செய்தபின் இதர ஜாதியாரால் பார்க்கப்படுமானால் தீட்டாகுமேயன்றி, சமைப்பதற்குமுன் அவை தீட்டாவதில்லையெனின், இதர ஜாதியாரால் பார்க்கப்படும் போஜனத்தில் என்னவேறுபாடு நவீனமாக உதிக்கும்? எவ்வித மாறுபாடு முண்டாவதில்லை; தீட்டாகிறதெனின், தீட்டெனிலென்ன? அம்மொழிக்குப் பொருளுண்டா? இல்லையே! பொருளில்லாத அப்பிரயோஜனமொழியை வழங்குவது வீணருக்குரிய கிரியையல்லவா? ஆகையால் வருணபேதம் பயனற்றவர்களுக்குரிய கொள்கையாம் என்பதில் என்ன ஆக்ஷேபம்?

பிராமண சிறுவர்கள் உபநயனத்திற்குப் பின் எப்படி பிராமணர்களாகிறார்களோ அப்படி, பிராமண ஸ்திரீகள் தங்கள் கணவனை ஆலிங்கனஞ் செய்துகொண்டபின் அவர்கள் சூத்திரத்துவம் தங்கள் கணவரது சுக்கிலத்தால் நிவாரணமாய் பிராமண ஸ்திரீகளாகிறார்களென்பது அவர்கள் கோட்பாடு. அதுவரையில் அவர்கள் பாகஞ்செய்யும் போஜனத்தை பிராமணர் தீண்டார்கள். புருஷருக்கு உபநயனத்தினால் பிராமணத்துவம் வருவதுபோல், ஸ்திரீகளுக்கு சையோகத்தால் பிராமணத்துவம் வருகின்றதாம். சையோகத்தால் பூருவஜனனம் நிவாரணமாய், நவீனஜனனம் உண்டாகிறதெனின், பிராமண ஸ்திரீகளில் சிலர் சூத்திர ஜாதியாருடன் சையோகிக்கிறார்களே! உதிக்கும்போதே சூத்திர ஸ்திரீகளாக உதித்து, சையோகத்தால் பிரம்ம குலத்தினராக மாறிய பிராமண ஸ்திரீகள் சூத்திர ஜாதியாருடன் சேர்ந்தபின் மீளவும் சூத்திர ஸ்திரீகளாக வேண்டும். அவ்வாறன்று, முதல் சையோகத்தால் மட்டும் கீழ்குலம் உயர்குலமாகுமேயன்றி முதல் சையோகத்திற்குப் பின் செய்யும் புணர்ச்சியினால் குலம் மாறாதெனின், மலையாள ஸ்திரீகள் ருதுவதியானவுடன் முதலில் பிராமணருடன் சேர்ந்து பின்பு தங்கள் சுயஜாதி கணவருடன் சையோகிக்க வேண்டுமென பிராமணர் ஏற்படுத்தி, அவ்வாறே முதலில் தாங்களே சையோகித்து வருகிறார்களே. பிராமண ஸ்திரீகள் சையோகத்தால் பிரம்ம குலத்தினரானது போல மலையாள ஸ்திரீகளும் பிரம்மகுலத்தினராகவேண்டுமே. இதன்றி, வைஷ்ணவ பிராமண ஸ்திரீகள் விவாகமாய் ருதுவதியாவதற்குமுன் விதவையாகச் சம்பவித்தால் சக்கராங்கிதம் செய்துகொள்ளின் அவர்கள் சூத்திரத்துவம் விலகி பிராமணத்துவம் வருகிறதென்றும், சைவபிராமண ஸ்திரீகள் ருதுவதியாவதற்குமுன் விதவையாகச் சம்பவிப்பின் தலைமயிரை சௌளஞ்செய்துகொள்ளின், சூத்திரத்துவம் விலகி பிராமண ஸ்திரீகளாகிறார்களென்பதும் அவர்கள்கோட்பாடு. வைஷ்ணவ

பிராமண விதவை ஸ்திரீகளின் சூத்திரத்துவம் சக்கராங்கிதத்தினால் நீங்குவதெனின், விஷ்ணுகோவில் தேவதாசிகள் அனைவரும், அநேகம் சூத்திரர்களும் சக்கராங்கிதம் செய்துகொள்ளுகிறார்களே; அவர்களேன் பிரம்மகுலத்தினராகப்படுவதில்லை? விஷ்ணு தேவாலய ரிஷபங்களுக்கும் சக்கராங்கிதம் செய்கிறார்களே! அவ்விரிஷபங்கள் சக்கராங்கிதம் பெற்றவுடன் ஏன் மானிட உருவை அடைவதில்லை? தென்கலை பிராமண ஸ்திரீகள் ருதுவதியாவதற்கு முன் விதவையாகச் சம்பவித்தால் தலைமயிரை க்ஷௌளஞ் செய்யாமல் மாட்டுசாணம், மூத்திரம் முதலியவற்றால் செய்யும் பஞ்சகவ்விய மென்பதை யுண்ணின், அவர்களது சூத்திரத்துவம் விலகி பிராமணத்துவம் வருகிறதெனின், சாச்சடங்கு செய்யும் சூத்திரர் முதலிய சமஸ்தஜாதியாரும் பஞ்சகவ்வியத்தை யுட்கொள்ளுகின்றனரே! பஞ்சகவ்வியத்தை உட்கொள்ளும ஒவ்வொரு சூத்திரர் முதலிய விதவை ஸ்திரீகளும் பிராமண ஸ்திரீகளாக வேண்டுமே. (தென்கலை பிராமண விதவைஸ்திரீகளின் சூத்திரத்துவத்தைப் போக்கி பிராமணத்துவத்தை உண்டாக்குவது மாட்டுசாணமும், மூத்திரமும் போலும்.) மேலும், சைவ பிராமண விதவை ஸ்திரீகள் தலைமயிரை க்ஷௌளம் செய்வதனாலேயே சூத்திரத்துவம் விலகி பிராமணத்துவம் வருகிறதெனின், அநேக சூத்திர விதவை ஸ்திரீகளும் க்ஷௌளம் செய்துகொள்ளுகிறார்களே. மயிரினாலேயே விலகின சூத்திரத்துவம் மயிர் வளரும்போது மீளவும் மயிருடன் வளர்ந்தேவருமே.

பிராமண ஜனனம் புண்ணிய ஜனன மெனின், துக்கமும், கொடிய நோய்களும், பிரசவவேதனையும் பிராமணருக் கில்லாதிருக்கவேண்டுமே. அவ்வாறின்றி, பாவிகளாகிய பறையரையே பற்றி வருத்தவேண்டிய பாவசம்பந்தமாகிய குஷ்ட முதலிய கொடிய நோய்கள், புண்ணியத்தினால் புண்ணிய ஜனனமெடுத்த பிராமணரையும் பற்றி வருத்துவதால், பிராமணஜனனம் புண்ணிய ஜனனமென்ப தெங்ஙன

ணம்? மேலும், பாவத்தினால் பாவஜனனமெடுத்த பறையரிலும் நூறுமடங்கு அதிகமான பிராமணஸ்திரீகள் அமங்கலிகளாகி தங்கள் இச்சைகளை மனக்களிப்போடு நிறைவேற்றத்தக்க கணவனை இழந்து, தங்கள் உயிர் உள்ளநாளளவும், மனக்கொதிப்பை யடைந்து, தீராத துக்கக்கடலில் முழுகி இருக்கிறார்களே! அம்மாதருடன் அம்மாதரின் பெற்றோரும், சகோதரரும், சகோதரிகளுமாகிய அக்குடும்பத்தாரனைவரும் அந்நிர்ப்பாக்கிய மாதரைக்கண்டு என்று மொழியாத துக்கத்தில் முழுகி இருப்பதால், துக்கக்கடலில் முழுகியிருக்கும் பிராமண ஜனனம் புண்ணிய ஜனனமென்பதெங்ஙனம்? இதன்றி, பிரசவநோயெனும் கொடிய நோய் கீழ்க்குலமாதரைமட்டும் வருத்தி, உயர்குல மாதராகிய பிராமணஸ்திரீகளை வருத்தாதிருக்க நாம் காண்கின்றோமில்லையே! ஆகையால், இவர்களைமட்டும் உயர்ந்த ஜாதியாரென்பதென்ன? மேலும் பாவத்தினால் சம்பவிக்கும் மலடு, சூத்திரர் முதலிய பாவகுலமாதரில் சம்பவிப்பதுபோலவே புண்ணியகுல மாதராகிய பிராமண ஸ்திரீகளிலும் சம்பவித்துத் தங்கள் வமிசம் தங்களோடு அஸ்தமித்துப்போவதை எண்ணி எண்ணி துக்கித்து, பூலோக பிரயாணத்தை மனக்கொதிப்புடன் கழித்து, மலடிகளாகவிருக்கும் பிராமண ஜனனம் புண்ணிய ஜனனமென்பதெங்ஙனம்? சூத்திர ஜாதியார் தங்கள் பிள்ளைகளின் மரணத்தைக் காண்பதுபோலவே, பிரம்மாவின் அபிமான புத்திரராகிய பிராமணரும், தாங்கள் பெற்று வளர்த்த தங்கள் அருமையான மக்களை மசானத்திற்கு இரையாக்கி, முறையோவென்று அலறி துக்கிக்கும்படி சம்பவிப்பதால் அவர்களைமட்டும் பிரம்மாவின் அபிமான புத்திரரென்பதென்ன? மேலும், இந்து சமயக் கொள்கையினின்று வேறு சமயக்கொள்கையைக் கைப்பற்றின பிராமணன் சமயபேதியானானேயன்றி ஜாதிபேதியாகவில்லையே! ஆகையால், அவனை பிராமணனென்று கூறாது, இழிகுலத்தவனென்றும் ஜாதி இழந்தவனென்றுங் கூறவேண்டியதென்ன? ஆதி

யில் பிராமணர் முதலிய நால்வகை வருணத்தவரும் ஏக காலத்தில் வகைக்கு ஒவ்வொருவரோ பிரம்மாவினால் சமைக்கப்பட்டனரென இந்து சமய நூல்கள் கூறுகின்றமையால், இந்நால்வகைச்சாதியாரும் எவ்வளவு அபிவிருத்தியாயினும் ஒரு ஜாதியாருக்கு மற்றொரு ஜாதியார் எக்காலத்திலும், எவ்வளவேனும் ஏற்றத் தாழ்வின்றி, சமனெண்ணிக்கையினராகவே இருத்தல்வேண்டும். அவ்வாறின்றி 1881-ம் ௵ எடுத்த குடிமதிப்பில் சூத்திரர்கள் பிராமணரிலும் அதிகமாகவிருக்கின்றார்களே! உலக சிருட்டிகரான பிரம்மாவின் அபிமான புத்திரரும் ஜேஷ்ட புத்திரருமாகிய பிராமணர் மற்றையஜாதியாரிலும் சமனெண்ணிக்கையினராக இராது குறைந்து போனதற்குக் காரணமென்ன? அன்றியும், பிராமணர் அனைவரும் ஆதியில் பிரம்மாவின் சிரசினின்று உதித்த ஓரேமனிதனின் பாரம்பரையினின்று தோன்றிய ஓரே குடும்பத்தாரெனின்; அவ் வகுப்பினர் அனைவரும் ஏகோபித்து சமரசப்பட்டல்லவோ இருத்தல் வேண்டும்; அவ்வாறின்றி விந்தியமலைக்கு வடக்கிலிருப்பவர்கள் சாராசிய பிராமணரெனவும், விந்தியமலைக்குத் தெற்கிலிருப்பவர்கள் திராவிட பிராமணரெனவும் பிரிந்து, இவ்விருவகுப்பினரில் ஒவ்வொருவகுப்பினரும் அவ்வைந்து உட்பிரிவினராகவும் அவ் வைந்தில் ஒவ்வொரு வகுப்பினரும் அனந்தம் உட்பிரிவினராகவும்பிரிந்து, ஒருவகுப்பினர் மற்றொரு வகுப்பினர் மனையில் போஜனஞ் செய்யாதும், ஒருவருக்கொருவர் கொள்வனை கொடுப்பனை செய்யாதும், ஒருவரையொவர் பகைக்கின்றமையால், பிரம்மதேசத்தின் பல இடங்களில் உதித்த இடபேதத்தினால் வருணபேதம் தோன்றியதென்பது வழுவான கோட்பாடென்று தெளிவாக விளங்குகின்றது. வருணபேதமென்னும் கொடிய கரம் நீண்டது உங்கள் பழுதான செய்கைகளைக் காட்டி நொறுக்குவதற்கே யன்றி, ஆதரித்து வழிகாட்டவல்ல. வருணபேதத் தீங்கால் விளையுந் தீமைகளை உங்களைச் சூழ நான்கு திக்கும் தேசாத்தியந்தம் நாசமடைந்து வரும்

க்ஷீணதசையினாலும், செல்வ அழிவினாலும் திருஷ்டாந்த பூர்வமாய்க் காணலாம். ஆகையால் உங்கள் அனைவருக்கும் சமுதாய க்ஷேமம் தடையற பெறுகும்வண்ணம் உங்கள் சாமர்த்தியத்திற்கும் திறமைக்குந் தக்கபடி வழுவான கோட்பாடுகள் ஏதேதுண்டோ அதையெல்லாம் அவலம்பித்து முக்கியமான கால்வாய்களை வெட்டிவிடுவீர்களாக.

---

## அதிகாரம் 6.

### ஆசாரம் அல்லது தீட்டு இன்னதென்பது.

1. சூத்திரர் தீண்டின குளத்து ஜலத்தை ஒருங்கே இறைத்து அதில் ஜனிக்கும் ஊற்று நீரை எடுத்து பானஞ் செய்வது மிகு வருத்தமானதனால் அது தீட்டல்லவெனவும், முகர்ந்து வைத்த கடத்தின் ஜலத்தை அச் சூத்திரர் தீண்டின் அதைக்கொட்டிவிட்டு மீண்டும் சுலபத்தில் முகந்துகொள்ளக்கூடுமாதலால், அதைமாத்திரந் தீட்டெனவும் பிராமணர் கூறுகின்றனர். ஆசாரம் அல்லது தீட்டென்பது இதுதான்.

2. பிரம்மாவின் முகத்தினின்று உதித்த பிராமணர் தாம் கருதிய விடத்திற்குச் செல்ல இருப்புப்பாதை முதலிய ஸ்தானங்களில் சீட்டு (டிக்கெட்டு) வாங்குங் காலேயில் அங்ஙனமேசெல்லக் கருதிவந்திருக்கும் பறையர், சக்கிலியர் முதலிய ஏனைய வருணத்தவருடன் ஒன்று சேர்ந்து உட்கார்ந்தும், ஒருவரையொருவர் நெருக்க நெருக்குண்டு ஒருவர்மீ தொருவர் விழுந்தும் ஒருவரது சுவாசத்தை மற்றொருவர் ஆக்கிராணித்தும் கிரமத்துடன் விரைந்து டிக்கெட்டு வாங்கி வண்டியின்மீ துட்கார்ந்தபின் அப்பிராமணர் சமீபக்கம் உட்கார்ந்துள்ள அப்பறையராதி வருணத்தவரை நோக்கி "அடா ஈனஜாதிப்பயலே மேலே விழாதேயடா தொடாதேயடா" எனத் தமது ஜாதியினை மேம்படு

த்திக்கொள்வதை நாம் பன்முறையும் பார்த்துவருகிறோமே. ஆசாரம் அல்லது தீட்டென்பது இதுதான்.

3. பிராமணரில் பெரும்பான்மையோர் தாம் ஸ்நானஞ்செய்தபின் அங்ஙனம் ஸ்நானஞ்செய்யாதிருக்கும் தம்மினத்தவரையே தீண்டலாகாதெனவும், ஒருகால் தீண்டின் மீண்டும் ஸ்நானஞ் செய்யவேண்டுமெனவும், அவ்வண்ணஞ் செய்யாவிடின் தீட்டெனவும் ஏற்படுத்தி ஒழுகுமவர்களே எவர்களினும் இழிந்தோராகிய விலைமாதர் மனைகளுக்குச் சென்று ஸ்நானஞ்செய்யாது அங்கு போஜனம் அருந்துவதும், அக்கீழ்மக்களுடன் சுகித்திருத்தலும் தீட்டல்லவென எண்ணுகின்றனர். ஆசாரம் அல்லது தீட்டென்பது இதுதான்.

4. வண்ணன் வஸ்திரங்களைச் சலவைசெய்துக் கஞ்சிட்டுத் தமது மனைகளுக்குக் கொண்டுவந்தபின் அவ்வண்ணனே மீண்டும் அவற்றைத் தீண்டுவனேல் தீட்டாகிறதாம். ஆசாரம் அல்லது தீட்டென்பது இதுதான்.

5. துரைத்தன வைத்திய சாலைகளில் பறையரினுங் கடையரெனப் பசுரும் தோட்டிகள் கொண்டுவேர்த ஜலத்தில் மிசிரித்துப் பண்படுத்திக் கொடுக்கும் ஔஷததத்தைப் பானஞ் செய்வது அநாசாரமல்லவாம். அவன் கையால் சுத்த ஜலம் வாங்குவது மாத்திரம் அநாசாரமாம். ஆசாரம் அல்லது தீட்டென்பது இதுதான்.

6. பாகஞ்செய்யும் மட்பாத்திரங்கள் மிகவும் அற்பக்கிரய முடைமையினால் சூத்திரர் பார்ப்பதனாலேயே அவை தீட்டாயினவெனமதித்து அம்மட்பாத்திரங்களைத் தகர்த்துவிடவேண்டுமாம். அம்மட்பாத்திரங்களினும் விலை மிகுந்த செப்பு பித்தளை பாத்திரங்களோ அச்சூத்திரர் தீண்டத் தீட்டாயினும் அவற்றைப்பாத்திரம் தகர்க்காது புளி சாம்பராதி வஸ்துக்களால் தேய்த்து அலம்புவதே போதுமானதாம். அவ்விலையினும் மிகுந்த வெள்ளிபாத்திரங்கள் சூத்திரரால் தீண்டப்படினும் புளி சாம்பராதிகளால் தேய்க்கின்

தேய்ந்து நஷ்டமாகுமெனக் கருதி சுத்தஜலத்தினால் சுத்தி செய்தலே போதுமானதெனவும், அதனிலும் விலையுயர்ந்த பொன் இரத்தினாபரணங்கள் ஜலப்படுமாயின் அவற்றின் மெருகு போய்விடுமென எண்ணி அவற்றிற்கு தீட்டே இல்லை எனவும், வீதிகளிலும், வர்த்தகசாலைகளிலும், உத்தியோகசாலைகளிலும் ஜலம் தேடி சுத்தஞ்செய்து வாங்க வேலாததாக இருக்கும் ரூபாய் அணா பைசாக்களுக்கும், ஜலம்பட்ட அக்ஷணமே பயன்படா தழிந்துபோகும். (மட்பாத்திரங்களினும் அற்பக் கிரயமுடைய) காகிதத்தினால் அமைந்துள்ள நோட்டுகளுக்கும் தீட்டே இல்லையாம். ஆசாரம் அல்லது தீட்டென்பது இதுதான்.

7. இங்கிலாந்தினின்று செய்துவரும் மீன் எண்ணெயையும் பர்ரோஸ்,பிரான்ஸ் முதலியவர்கள் மாட்டின் மாமிசத்தால் செய்து அனுப்பும் பானங்களையும், கோழி முட்டையைச் சேர்த்து செய்தனுப்பும் தின்பண்டங்களையும், பிராந்தி முதலிய இலாகிரி வஸ்துக்களையும் கொஞ்சமேனும் நெஞ்சு அஞ்சாது அருந்தும் இவர்கள் இத்தேசத்தில் கொல்லா விரதத்தை நிலைநாட்டியவர்களென தம்மைத் தாமே புகழ்ந்துகொண்டு தம்மை நன்கு மதிக்கும்படிச் செய்துகொள்பவரது தீய ஒழுக்கத்தைப் பாருங்கள். இவ்வகுப்பினரைப் பின்பற்ற உங்கள் உள்ளம் உடன்பட்டதெப்படி ?

8. ஒருஜாதி ஸ்திரீயுடன் மற்றொருஜாதி புருஷன் சேரின் அவ்விருபாலருக்கும் உதிக்கு மக்கள் சூத்திரரினுங் கடையரான சங்கரஜாதியினராவரெனவும், அச்சங்கரஜாதி மரபினரில் உதிக்கும் பெண்சந்ததியார்களும், சூத்திர ஸ்திரீகளும் ஏழு தலைமுறை பரியந்தம் பிராமணருடன் சையோகிக்கச் சையோகிக்க (பொன்னைப் புடம் போடப்போட அதன் மாற்று உயர்வதுபோல) அவர்களது இழிவு நிவாரணமாய் பிராமணராகின்றனரெனவும் கூறும் தீச்செய்கையுடைய இப்பிராமணரைப் பின்பற்றி யொழுக உங்களது மனந்துணிந்த தெவ்வாறு ?

9. துரைத்தனத்தார் நம்மிடம் நிலவரி, ஜலவரி, தீபவரி என்று வாங்குவதுபோல, பிராமணர் நம்மிடத்தில் விவாகவரி, சோபனவரி, சீமந்தவரி, புண்ணியாவசனமென்னும் பிரசவித்தவரி, நாமகரணவரி, வித்தியாப்பியாசவரி, மரணவரி, கருமாந்தரவரி, அமாவாசைதர்ப்பணமென்னும் மாதாந்தரவரி, ஸ்ரார்த்தமென்னும் வருடாந்தர வரிகளுடன் தீபாவளிவரி, தைமாதவரி, ஆடிமாதவரி, புதவருடவரி, நோன்புவரி, நவராத்திரி பூசைவரி, விநாயகசதுர்த்திவரி, கிரகப்பிரவேசவரி, ஆலயங்களில் விக்கிரகங்களின் அபிஷேகவரி, அர்ச்சனைவரி, ஆராதனைவரி விக்கிரகங்களை அலங்கரித்து வீதிகள்தோறும் புஜங்களில் சுமந்து திரிந்து வாங்கும்வரி, அவற்றின் சோபனவரி, என்றிப்படி அளவிறந்த வரிகளையும் வாங்குகின்றனரே! துரைத்தனத்தார் நம்மிடம் வாங்கும் குடி இறைக்குப் பிரதியாகக் கல்விச்சாலைகள், நியாயஸ்தலங்கள், வைத்தியசாலைகள் முதலியவற்றை ஏற்படுத்தியிருப்பதுமன்றி, மாந்தருக்குத் தீங்குசெய்யும் சர்ப்பம், புலி, கரடி முதலிய துஷ்ட பிராணிகளைச் சங்கரித்தும், அடர்ந்த வனங்களையழித்தும், நவீன ஆரண்யங்களைப் புதுப்பித்தும், கால்வாய்கள் வெட்டி ஜலமில்லாத விடங்களில் ஜலங்கொண்டுவந்துவிட்டும் அனந்த நன்மைகளைச் செய்து வருகின்றனரே. பிராமணர் நம்மிடத்தில் பெற்றுக்கொள்ளும் எண்ணிறந்த வரிகளுக்குப் பிரதியாக ஏதேனும் ஒரு நன்மையாவது செய்திருக்கின்றனரா? இல்லையே! நமது செல்வத்தை இவ்வாறு கிரகித்து, நமக்கு இடறையே சதாகாலமும் விளைத்துவரும் பிராமணரால் யாதொரு குறையும் நேராதென்று அச்சமற்றிருக்கின்றீர்களே; இஃதென்ன ஆச்சரியத்தினும் ஆச்சரியம். கபடும், சூதும் கெடுமதியும் நிறைந்துள்ள இவ்வகுப்பினர் பந்தித்த பந்தனைக்குட்பட்டு அழியாதிருக்க முயலுங்கள். முயலுங்கள்.

10. பிராமணர் மன்னர்களையடுத்து எவ்வாறு அவர்கள் பொருளைக்கிரகித்தனரோ அவ்வாறேசூத்திரதனவான்களையுமடுத்து அவர்களது மனம் எவ்வவ்வற்றில் நாடுமோ அவ்வவ்

வற்றிற்குத்தக்க சமயோசிதமான யுக்தி சொல்லி அவ்வவ்வற்றை நடப்பித்துத் தம்மிடத்து மிக்க அன்பை வருவித்து சூத்திரகுல மரபினரை விருத்திசெய்விப்பவர்களைப்போல் நடித்து அவர்களது பொருளை கிரகித்து அக்குடும்பத்தாருக்கே தீராவசையை நிலைநாட்டி வருகின்றனர். எந்த தனவான் மனையும் அவர்களன்றி யிராது. மாதர் தங்கள் நாயகர்கள் எதேது மொழியினும் அவ்வனைத்தையும் நம்பி அவர்களுக்குக் கீழ்ப்படிவது அவர்களது இயற்கை. அதுபோல நீங்கள் பிராமணர் மிடற்றினின்று உதிக்கும் சித்திரப்பேச்சுகளை அவலமொழியெனக் கருதாது அபபவாக்கென்க் கருதி இருக்கிறீர்களே; இதென்ன விபரீதம்!

11. பூலோகத்திலே வியாபகமா யிருக்கும் எந்தெந்த மாந்தரின் இயற்கைக்குணம் எதெதுவோ அது எப்போதும் மாறாது வமிசபரம்பரையாக வருவதை பிரத்தியக்ஷமாகப் பார்த்துவருகிறோம். ஆதியில் அங்கிலேயர் இத்தேசத்திற்கு வியாபார விஷயமாக வந்தவர்கள். வந்தவிடத்தில் அரசாளும்படி சம்பவித்து சக்ரவர்த்தி பதவிக்குவந்தும், அவர்கள் இயற்கைக்குணமாகிய வியாபாரத் தொழிலைக் கைவிடாமல் நாளதுவரையில் உப்பு சாராயம் முதலியவற்றை விற்றுவருகின்றனர். மகம்மதியர் தங்கள் துன்மார்க்கத்தின் வெற்றியினால் பூர்வகாலத்தில் இக் கீழ்கண்டதின்மீது வந்தார்கள். வந்த விடத்தில் அரசாளும்படி சம்பவித்திருந்த காலத்திலும், அவ்வரசாக்ஷி கைவிட்டுப் போயிருக்கும் இக்காலத்திலும் அவர்களது இயற்கைக்குணமாகிய துன்மார்க்கம் நாளதுவரையில் போகாமலே இருக்கிறது. அவ்வாறே பிராமணர் தங்கள் தேசத்திலுண்டான பஞ்சத்தால் அன்னவஸ்திராதிகளுக்கு வருவழியின்றி யாசகமெடுத்துய்ய இப்பரியாய தீபத்திற்கு வந்தவர்களானதனால், அவர்கள் எண்ணி வந்த பூர்வநோக்கம் நெடுங்காலமாகியும் அது இடையறாது நாளது வரையில் வமிசபரம்பரையாக வருகின்றது. எத்தொழிலிலும் பிச்சை எடுப்பது மிகு இழிதொழிலாகும். ஆகை

யால், நகர்வீதிகள்தோறுமுள்ள வாசற்படிகள்மீதேறி "பவதிபீக்ஷாந்தேஹி" எனப் பிச்சையெடுக்கும் இவ்விழிந்தோரது கிரியைகள் அனைத்தும் இழிந்ததாக இருப்பதன்றி சிறப்படைந் திருப்பதற்குக் காரண மில்லையே. ஆகையால், இவர்களைப் பின்பற்றுவதிலும் வேறென்ன இழிவிருக்கின்றது ?

12. சில பிராமணர் கருமாந்திரம் கலியாணம்முதலியவை நடக்கும் மனைகளில் ஈனமான மின்றி, நுழைந்து காக்கையைப்போல் கத்தி, தக்ஷணைகள் வாங்கியும், சில பிராமணர் தனைத்தன உத்தியோக பதவியில் அமர்ந்து பெற்றுக்கொள்ளும் சம்பளத்தோடு திருப்தியடைந்திராது அடங்காப் பொருள்வாஞ்சையால் துர்வழியில் பொருள் சம்பாதித்தும், பட்டினியால் வருந்தி உத்தியோக பதவியில் சேரவரும் சூத்திரர் முதலிய மற்றைய ஜாதியாரைச் சீறிச் சினந்து உத்தியோகத்தில் சேர்க்காமலும், தப்பித்தவறி சேர்ந்துள்ள சூத்திரரை கெடுநினைவால் மேலதிகாரிகளிடம் அடிக்கடி கோள் கூறி அவரை யவ்வுத்தியோகத்தினின்று எடுபட்டுப்போகும்படிச் செய்தும் தமதுமனைக்கு மிக்க பசியுடன்வரும் சூத்திர யாசகருக்கு ஐயமிடக் கூடாதென்று மதுகூறி யுள்ளாரெனமொழிந்து சிறிதும் இரக்கமின்றித் துரத்தியும், அன்னசத்திரம் வைத்திருப்பவர்கள் தமது சுய குலத்தவரிடத்தும், சூத்திரரிடத்தும் ஓரே வித போஜனகிரயம் பெற்றுத் தம் மினத்தவருக்குமட்டும் உயர்ந்தவகை போஜனமும், மற்றைய ஜாதியாருக்குத் தாழ்ந்தவகை போஜனமும் பரிமாறிவருவதையும் நீங்களனைவரும் கண்டுங்கேட்டுமிருந்தும் இத்தகையோருக்கு நீங்கள் வருந்தித் தேடிய பொருளைத் தீர்க்காலோசனையின்றி வாரி இறைக்கின்றீர்களே! இதென்ன அறிவின்மை!

13. எனது நண்பர்களே ! பிராமணர் எவ்விடத்திலேனும் சமஸ்தஜாதியாருக்கும் பயன்படும்படி சத்திரம் தேவாலயம் வித்தியாசாலை முதலியவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தருமத்திற்கு ஏற்படுத்தி யிருக்கின்றனரா? இல்லையே !

இத்தகைய தருமகுணஞ் சிறிது மில்லாத வஞ்சக மரபினர் மற்றைய ஜாதியார்களால் மேற்கூறியசத்திரமுதலியவற்றைச்செய்வித்து மற்றெவ்வருணத்தவருக்கும் பயன்பட ஒட்டாது தம்மவருக்கே பயன்படச்செய்வித்தும்வருவதை நீங்கள் அனைவரும் அறிந்ததில்லையா ? இதினும் உங்களுக்குச் செடுதி இன்னும் என்னவேண்டும் ?

14. அறிவிற்சிறந்தவர்களே ! நீங்கள் பிராமணரினும் தாழ்ந்தவர்களல்ல வென்பதற்கும், அவர்கள் பந்தித்த பந்தனையினின்று விலகினவர்க ளென்பதற்கும் அறிகுறியாக உங்கள் முகத்தில் அவர்கள் பதிவித்த சமயசின்னங்களாகிய சைவத்திற்குரிய வெண்குறியையும், வைஷ்ணவத்திற்குரிய செங்குறியையும், உங்கள் பெயர்களினிறுதியில் அவர்கள் அமைத்த ஜாதிவேற்றுமைகளைக் குறிப்பிக்கும் முதலியார் நாயடு முதலிய தொடர்மொழிகளையும் நீங்கள் முதன்மையாக ஒழிக்கவேண்டும். அவ்விரண்டும் உங்களைவிட்டு விலகாது பற்றிக்கொண்டிருக்குமளவும், நீங்கள் ஏதேது மொழியினும், வாசிப்பினும் அவ்வனைத்தும் பயன்படாமல் அவர்களுக்குக்கீழ்ப்படிந்தவர்களென்றே அங்கீகரிக்கப்படுவீர்கள். ஆகையால், உங்களை நீங்களே இழிவுபடுத்திக்கொள்ளாவண்ணம் அவர்களது சமயபேத வருணபேதங்களை விவேகத்தீயினால் சுட்டெரித்து இளஞ்சிங்கத்தைப்போல் ஜெயமடையுங்கள்.

15. பிரியமானவர்களே ! இன்னும் இரண்டொருவாக்கியத்திற் சொல்லுகிறேன் கேளுங்கள் :—நமது பெயர்களின் இறுதியில் தொடர்மொழியாக வரும் முதலியார் நாயடு முதலிய மொழிகள் அங்கிலேயர் பெயர்களின் முதலில் தொடர்மொழியாகவரும் “மிஸ்டர்” என்னும் மரியாதையைக் குறிப்பிக்கும் மொழியைப் போன்றதல்ல. பிராமணர்களது பெயர்களின் இறுதியில் தொடர்மொழிகளாக வரும் ஐயர், ஐயங்கார் முதலிய மொழிகளே அத்தகைய மேன்மையைக் குறிப்பிக்கும் மொழிகளாம். ஆனால் முதலியார் நாயடு முதலிய மொழிகளோ வெனின், கீழ்மக்களென்றும்

பிராமணனது வேலைக்காகவே பிரம்மாவினுல் படைக்கப்பட்டிருக்கிறன்" 414 "சூத்திரன் எஜமானனுல் வேலையினின்று நீக்கப்பட்டிருந்தாலும், அந்த வேலையானது அவனைவிட்டு நீங்காது. இம்மைக்கும் மறுமைக்கும் உபயோகமாக அவனுடன் பிறந்த அந்த வேலையை இவனே செய்துதீரவேண்டும், ஆதலால், அவன் மறுமையில் செய்யவேண்டிய வேலையுடன், இம்மையின் வேலையையும் சமக்காதிருக்க இறக்குமளவும் பிராமணனுக்கு உழைக்கக்கடவன்." சூத்திரனுபத் தருமம். 99 - சூத்திரன் பிராமணனுக்குப் பணிவிடை செய்வதனுல் தன்மனையாள் மைந்தர்முதலானவர்களின் பசியைத்தீர்க்கக்கூடாவிடில் அவர்கள் பலகார முதலியவற்றைச் செய்து விற்றுப்பிழைக்கலாம் அல்லது, கூலிவேலைசெய்து பிழைக்கலாம்." 374-சூத்திரன் பிராமணவிதவைஸ்திரீகளைப் புணர்ந்தால் அச்சூத்திரனின் பீஜம் சிசினம் இவைகளை அடியோடறுக்கவேண்டியது. புருஷனது சுவாதீனத்திலிருக்கும் பிராமணஸ்திரீயை சூத்திரன் புணர்ந்தால் அவனது தேசமுழுவதையும் வெட்டி அவனுடைய எல்லாப்பொருளையும் கவரவேண்டியது." 380 "பிராமணன் எத்தகைய பாவஞ் செய்யினும் அவனைக் கொல்லாமல் காயமின்றி அவன்பொருளுடன் அவனது ஊரைவிட்டப்புறப்படுத்தவேண்டியது. ஏனெனின், பிரம்மஹத்தியைவிட அதிகமானபாவம் உலகத்தில் கிடையாது. ஆதலால், பிராமணனைக் கொல்லவேண்டுமென அரசன் மனதினுல் நினைக்கவேகூடாது." எனக்கூறியுள்ளார். இத்தகையதன் மார்க்கநூல்களை எழுதிவைத்துக்கொண்டு நடத்தும் இச்சந்ததியாரைப் பின்பற்றியொழுக உங்கள்மனந்துணிந்தது பரிதாபம்! பரிதாபம்!

19. பிரியமானவர்களே! பிராமணர் தங்களதிகாரஞ் செல்லுவது இப் பூமண்டலத்தில்மட்டுமல்ல, இப்பூமண்டலத்திற்குச் சம்பந்தப்படாத ஆகாய வீதியிலுள்ள நக்ஷத்திரங்களின்மீதும், இறந்தவர்களின் ஜீவான்மாக்களி

ன்மீதும் செல்வதாக மிகு மேம்பாட்டுடன் மொழிந்து கொள்ளுகின்றனர். எவ்வாறெனின், பிராமணர் இத்தேகத்துடனே இப்பூமியினின்று விண்ணுலகத்திற்குச் சென்றார்களெனவும், அங்குச் சென்றவர்களும் இப்பூமியில் இறந்த பிராமணர்களின் ஜீவான்மாக்களும் நக்ஷத்திர மண்டலத்தில் சுடரொளி தேகத்தைப்பெற்று நட்சத்திரங்களாக வாசஞ்செய்துகொண்டிருக்கிறார்களெனவும், இப்பூமியின்மீதுள்ள பிராமணர்களின் அதிகாரமும், வேண்டுதலும் ஆகாயவீதியிலுள்ள பிராமணர்களாகிய அந்நக்ஷத்திரங்களின் மீது செல்லுவதுமட்டுமல்ல, மேகமண்டலத்தின் மீதும் செலுத்தி மழைபெய்விக்கத் தங்களுக்கு வல்லமை இருக்கிறதெனவு மொழிகின்றனர். இதன்றி, இறந்தவர்களின் ஆன்மாக்கள் மிகு பசியுடனிருக்குமெனவும், அவற்றின் பசியைத் தணிக்கத் தங்களைக்கொண்டு ஸ்ரார்த்தம் செய்விக்கப்படின் அவற்றின் பசி தணியுமெனவு மொழிந்து பொருளைக் கிரகிக்கின்றனர். முறையே இராமர் கங்காநதியில் ஸ்ரார்த்தங் கொடுக்கையில் இறந்துபோயிருந்த அவரது தந்தையாகிய தசரத மகாராஜன் இம்மண்ணுலகத்திற்கு மீண்டும் வந்து, தன் புத்திரனால் கொடுக்கப்பட்ட பிண்டப்பிரசாதத்தை மிகு அவாவுடன் வாங்கியுண்டுசென்றதாக மொழிகின்றனர். ஸ்ரார்த்தங் கொடுக்குங்காலத்தில் பிராமணருக்கு எந்தெந்தப் பதார்த்தங்களில் பிரியமோ அவ்வவ்வற்றையே ஸ்ரார்த்த காலங்களில் அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமாம். ஏனெனில், பிராமணருக்கு எவ்வெவற்றின்மீது பிரியமோ அவ்வவற்றின் மீதே இவ்வுடலைவிட்டு விண்ணுலகத்திற் சேகிய ஜீவான்மாக்களுக்கும் பிரியமாம். உருளைக்கிழங்கு வெண்காயம் முட்டைசோஸ் முதலியவற்றை அவை உண்ணுவாம். ஏனெனின், பிராமணருக்கு அவற்றில் பிரியமில்லாததால் அச்சீவான்மாக்களுக்குப் பிரியமில்லாதிருந்தாலும் இருக்கக்கூடும். இத்தகைய அண்டப்புரட்டனை எத்தேசத்திலேனும் பார்த்திருக்கின்றீர்களா? இல்லையே!

20. பிராமணர் ஸ்ரார்த்தமுதலிய சாச்சடங்குகள்செய்யுங்காலங்களில் தம்மவர்களே யுண்டு மிகுந்த சேஷபோஜனவகைகளைப் பூமியில் புதைத்துவிடினும் விடலாமேயன்றி, சூத்திரருக்குமட்டும் போடலாகாதென அஞ்சாநெஞ்சுடனே இஞ்சித்தும் இரக்கமின்றி அவற்றைப்புதைத்துவிடுகின்றனர். சூத்திரர்மட்டும் அத்தகைய காலங்களில் தாங்கள் உண்பதற்கு முன்னமே பிராமணருக்கு அரிசி, காய், கிழங்கு முதலியவற்றை ஸமர்ப்பித்தபின் உண்ணவேண்டுமாம். ஸ்ரார்த்தமல்லாத மற்றக் காலங்களில் தம்மனைக்குப் போஜனத்திற்கு வரும் சூத்திரர் முதலியோரைக் காக்கவைத்துத் தம்மவர் அனைவரும் உண்டபின் மிகுந்த சேஷத்தை அவர்களுக்குப் பரிமாற வேண்டுமென ஏற்படுத்திக்கொண்டு அவ்வாறு செய்துவருவதுமன்றித், தாங்கள்மட்டும் சூத்திரர்களது மனைகளினுள் தாராளமாகப் புகுந்து பாகசாலைமுதலிய பற்பல விடங்களில் உலாவலாமெனவும், அப்பாகசாலையிலுள்ள பொருள்களை தீண்டலாமெனவும், சூத்திரர் தம்மனைக்குள் புகுதலுந் தீண்டுதலுங் கூடாதெனவும், பிராமணர் தாம் உண்ணுங்காலையில் சூத்திரருடன் வார்த்தையாடின் அப்போஜனம் தீட்டாய்விடுமென வார்த்தையாடாதும் அவ்வண்ணம் உணவெடுத்துப் புசித்த எச்சிற் கையையும் அச்சூத்திரருக்குக் காட்டக்கூடாதெனவும், சூத்திரர் பிராமண ஸ்திரீகளைத் தீண்டுதல் அடாதெனவும், பிராமணர்மட்டும் சூத்திரஸ்திரீகளைச் சையோகிக்கலாமெனவும், அங்ஙனம் சையோகித்துக்கொள்ளும் அச்சூத்திர ஸ்திரீகளுக்கு மோக்ஷ பதவி கிடைக்குமெனவும், பிராமணர் சூத்திரரால் சுவாமி என்று மிகு சிறப்புடன் அழைக்கப்படவேண்டுமெனவும், சூத்திரர் பிராமணரால் அடே என்று மிகு இழிவாக அழைக்கப்படலாமெனவும் ஏற்படுத்திக்கொண்டனர். ஐயையோ! சூத்திரர் பொருளையே கிரகித்து, அதனாலேயே ஜீவித்தும் அவர்களை எவ்வளவு துரோகச் சிந்தையுடன் நடத்துகின்றனர். ஆகையால் பிரியமானவர்களே! நீங்கள் பிராமணக்கொள்கையினின்று விலகி ஒழுகுங்கள்.

21 ஓ! பிராமண விசுவாசகர்களே! ஓர் பெரிய ராஜகுடும்ப மனைத்தையும், நீங்கள் தொழும் பிராமணர் க்ஷணப்பொழுதில் நிர்மூலப்படுத்தியதைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன் கேளுங்கள்;—மதுரையை ஆண்டுவந்த திருமலை நாயகன் பிராமணருடைய போதனைக்குட்பட்டு, அவர்கள் கற்பித்தவாறு ஓர்பெரிய குளம், தேவாலயம், மண்டபம் இவற்றைச் சமைத்து அதில் பிராமணரை வைத்து அவர்களுக்கு மேம்பாடு செய்துவருங்காலத்தில் அங்கிருந்த பௌத்த முனிவர்கள் அவ்வரசனை நோக்கி நீ வியர்த்தமாக உன் பொருளைச் செலவழித்துக் கல்லையும், செம்பையும் உன்னைப்போன்ற மனிதராகிய பிராமணர்களையுந் தொழுவது நல்லதல்லவென்று நற்போதனையூட்டி அவரைத் தமது மார்க்கத்திற்குத் திருப்பிக் கொண்டனர். அதைக்கண்ட வஞ்ச நெஞ்சினராகிய பிராமணர் அவ்வரசனையும், அவர் குடும்பத்தாரனைவரையும் ஒருங்கே நிர்மூலப்படுத்திவிடவேண்டுமெனக் கருதி, அவ்வரசனால் கட்டப்பட்ட கற்சுரங்கத்தினுள் மீனாக்ஷியம்மன் பிரசன்னமாயிருப்பதாயும், அதை நீங்கள் உங்கள் குடும்பத்தாரனைவருடன் வந்து பார்க்கலாமெனவு மொழிந்து, அவ்வனைவரையும் அச்சுரங்கத்தினுட் சென்று பார்க்கும்படி கற்பிக்க, முறையே அவர்கள் எச்சூது மறியாது உட்சென்றவுடன், பிராமணர் ஓர் பெரிய கற்பாறையைப் புரட்டி அதன் வாசற்படியை யடைத்துவிட்டனர். அதனுட் சென்றவர்கள் அனைவரும் வெளிப்பட வழியின்றி மாய்ந்தனர். பிராமணர் அவ்வரசனது சேனாதிபதிகளுக்கும், பிரஜைகளுக்கும் அரசன் தனது குடும்பத்துடன் மீனாக்ஷியம்மனில் ஐக்கியமாய் விட்டனரென அபத்தமொழியை மொழிந்து தப்பித்துக்கொண்டனர். ஐயையோ! இதென்ன குரூரச்செய்கை! இத்தகைய கொடியரையும் நம்பிப் பின்பற்றலாமா!

22. பிராமணர் ஸ்ரார்த்தமுதலிய கிரியைகள் செய்யுங்காலங்களில் மாட்டின் சாணம், கோஜலம், பால், தயிர் நெய் என்பனவற்றை ஒன்றுசேர்த்து உண்ணுகின்றனர்.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

இதற்கே பஞ்சகவ்விய மென்னப்படும். விலங்கினங்களில் பன்றியொன்று தவிர மற்றெந்த ஜந்துக்களும் மலத்தை யுண்பதில்லை. விலங்கினும் உயர்ந்தோராகிய மாந்தரில் பிராமணர்மட்டுமே மாட்டின் மலமாகிய சாணத்தையும், மூத்திரமாகிய கோஜலத்தையும் உண்பவர்கள். மாட்டின் மலத்தையும் மூத்திரத்தையும் உண்ணும் பிராமணர்களைப் பின்பற்றி யொழுகுவது அதனிலும் இழிவாகுமல்லவா? ஆகையால், இவ்விழிந்தோரைப் பின்பற்றி யொழுகாதிருக்க முயலுங்கள்.

23. பிராமணக் கன்னிகைகள் கெட்டதினங்களில் ருதுவதியானால் அக் குடும்பத்திற்குக் கெடுதி சம்பவிக்குமெனப் பிராமணர்கருதி ருதுவதியாவதற்கு முன்னமே அக்கன்னிகையின் கணவனைக்கொண்டு சையோகிக்கும்படி செய்கின்றனர். கெட்டதினங்களில் ருதுவதியாகாதிருக்கக்கருதி நல்லதினம்பார்த்து நல்லமுகூர்த்தத்தில் நல்ல நட்சத்திரத்தில் சையோகிக்கச்செய்யும் பிராமணஸ்திரீகளில் அனந்தம்பெயர் அதிதுரிதத்தில் தங்கள் கணவனை ஸ்மஸாநத்திற்கு இரையாக்கித் தாம் விதவைகளாகின்றனர். ஆகையால், இத்தகைய விவேக சூனியரைப் பின்பிற்றி யொழுக உங்கள் மனம் துணிந்ததெப்படி?

24. சூத்திரராகிய இத்தேசபூர்வகுடிகளே! நீங்கள் உங்கள் ஜாதியை உயர்த்தும் நிமித்தம் ஒருவன் கல்வி அறிவு நல்லொழுக்கங்களற்றுத் தீயொழுக்கமும் தீச்செயலும் விகாரசொரூபமும் உடையவனாய், அன்னவஸ்திராதிகளுக்கு வருவழியின்றிச் சிறுமையடைந்து வருந்துபவனுமாயிருப்பினும், ஜாதி கோத்திரங்களில்மட்டும் உயர்ந்திருக்கின் போதுமெனக்கருதி அந்நிர்ப்பாக்கியனுக்கு உங்கள் அரிய செல்வப் புத்திரிகளை மணம்புரிவிக்கின்றீர்களே! ஐயையோ! உங்கள் அருமைச்செல்வப்புத்திரிகள் மணம்புரிந்தபின் அருமைகுலைந்து, சிறுமையடைந்து, அன்னவஸ்திராதிகளுக்கு வருவழியற்றிருப்பதை எண்ணிஎண்ணி எக்கமுற்று, மனம்வெந்து நொந்து வருந்துவதை நீங்கள் கண்ணாரக்கண்டுந் துக்கிக்காது, எது இல்லாதுபோயினும்

ஜாதி உயர்ந்ததே என எண்ணி எண்ணி ஆனந்திக்கின்றீர்களே! இதென்ன விபரீதம்.

25 எனது ஜனனதேசத்தவர்களே! உங்களிற்சிலர் கணவனை யிழந்த விதவைஸ்திரீகள் தங்கள் மனையிலிருந்து பல சோரநாயகர்களை அந்தரங்கத்தில் முகர்ந்துகொண்டாலுங் கொள்ளலாமே யன்றிப் பகிரங்கமாகப் புநர்விவாக மட்டும் செய்துகொள்ளக்கூடாதெனவும், அவ்வாறு செய்துகொள்ளின் அம்மாதின் குடும்பத்தாருக்கு அவமானம் நேருவதுமன்றி பெருங் குற்றத்திற்கு உள்ளாவார்களெனவும் புநர்விவாகஞ் செய்துகொள்ளும் மாதர் தத்தமது ஜாதியினின்று நிவர்த்திக்கப்படுவரெனவும் ஏற்படுத்திப் புநர்விவாகஞ் செய்துகொள்வதினின்றும் தடுத்திருக்கின்றீர்களே! இதென்ன பரிதாபம். ஆண்பெண்ணாகிய இருபாலாருக்கும் இச்சை ஒரே அளவாக இருந்தும் தாரமிழந்த புருஷர் மட்டும் புநர்விவாகஞ் செய்துகொள்ளலாமெனவும், கணவனையிழந்த மாதர்மட்டும் புநர்விவாகஞ் செய்துகொள்ளலாகாதெனவும் தடுத்திருப்பது எவ்வளவு அநீதமென்பதை யோசித்துப் பாருங்கள். கைம்மாதரிலநேகர் தங்கள் இச்சையை நிறைவேற்றச் சொந்தகணவனையற்றிருப்பதால் பரபுருஷகமனஞ் செய்து பலவியாதிகளையடைந்து வருந்துவதையும், சோரத்துவத்தாலான கெர்ப்பத்தைப் பெருத்த அவமானத்தினாலும், அச்சத்தினாலு மழித்து, அதனால் நேரிடும் தீராத வியாதியை யடைந்து வருவதையும் நாம் பன்முறையும் பார்த்துவருகின்றோமே. மாதருக்குப் புநர்விவாகஞ் செய்வதனால் என்னகெடுதி சம்பவிக்கும்? கல்வி அறிவால் திடசித்த மடைந்திருக்கும் புருஷரே புநர்விவாகமும் பரஸ்திரீ கமனமும் செய்துகொள்ள சுயாதீனம் பெற்றிருக்கிறார்களெனின், பரபுருஷ கமனத்தையும் புநர் விவாகத்தையும் சிறிதும் பெறாதிருக்கும் கைம்மாதர் தங்கள் கற்புநிலைமை எவ்வாறு காக்கக்கூடும்? புருஷர் பரஸ்திரீகமனஞ் செய்வது குற்றமல்லவென்றும், ஸ்திரீகள் பரபுருஷகமனஞ் செய்வது குற்றமென்றும் எண்ணுவதால், பரஸ்திரீகமனஞ்செய்யச் சுயாதீனம் பெற்றிருக்

கும் புருஷருக்குப் புநர்விவாகம் வேண்டுவதில்லை, ஸ்திரீகளோ பரபுருஷகமனஞ்செய்யச் சிறிதும் இடம்பெறுதிருப்பதால், அவர்கள் புநர்விவாகஞ் செய்துகொள்வது யுக்திக்கும் புத்திக்கும் ஒத்ததாகவிருக்கின்றது. இப் புநர்விவாகத்தால் ஜாதிகெடுமென எங்ஙனஞ் சொல்லக்கூடும் ?

26. ஒருஸ்திரீ விபசாரம்புரிந்து புத்திரனைப்பெறின், அப்புத்திரர்களை இழிகுலத்தவர்களென மொழியலாகாது. ஏனெனின், அக்குற்றமியற்றியது அம்மக்களின் தாயேயன்றி அம்மக்களல்லவே. ஆகையால், அவர்கள் இழிகுலத்தவர்களாகார்கள். ஆனால், பொய்யரும், வஞ்சகரும், கள்ளரும், கொலைபாதகரும், மதுபானரும், விபசாரமார்க்கரும், துன்மார்க்க நூலெழுதித் தேசத்தைப் பாழ்படுத்திய நூலாசிரியர்களும், பொய் மதங்களைப் போதிக்கும் புரோகிதர்களும், ஜாதிவேற்றுமையையேற்படுத்தி ஐக்கப்பட்டிருந்த இத்தேசத்தவர்களைப் பலவாறாகக்கலைத்து, ஒருவரையொருவர் பகைக்கச்செய்த மனுநூலாசிரியர்களும், தங்களையே சிறப்பித்துக்கொள்ளும் அகங்காரிகளுமே இழிகுலத்தவரெனப்படுவார்கள்.

27. சூத்திரர்களே ! நீங்கள் பிராமணரால் வதைக்கப்படுவதுபோல நீங்களும் பறையரைச் சிறிதும் இரக்கமின்றி வருத்துகின்றீர்களே! உங்களை ஒருவர் வருத்தினால் எப்படி வருந்துவீர்களோ அப்படியே பறையர் முதலியவர்க்கும் இருக்குமென என் உணர்ந்திலீர்கள் ? "உன்னைப் போல் பிறனையும் விரும்பக்கடவாய்" யெனச் சமயிகள் கூறுவதையாயினும் நீங்கள் கேள்விப்பட்டதில்லையா ? பறையர் முதலிய இத்தேச பூர்வகுடிகளை நீங்கள் மிகு இழிவாக நடத்துவது உங்களது விவேகசூனியத்தை நன்கு விளக்குகின்றதே.

28. பிராமணர் பிரஜைகளை ஒருங்குசேர்த்து ஜாதி வகுப்புப் பிரித்தகாலத்தில் பறையனையுந் தருவித்து அவர்களுக்கும் ஓர்வகுப்பு ஏற்படுத்தித் தங்களுக்குள் கீழமைந்தொழுகவேண்டுமென ஏற்படுத்தினர். பறையர் பிராமணரது நோக்கத்தையறிந்து, நாங்கள் உங்களுக்கு கீழமைந்து

ஒழுகவுமாட்டோம்; எங்கள் கஷ்டார்ஜிதமாகிய பொருளையும் உங்களுக்குக் கொடுக்கவுமாட்டோமென நிராகரித்துவிட்டனர். பிராமணர் கெடு நினைவால் இவர்களை நாசமாக்கிவிடவேண்டுமெனக் கருதி இவர்களைச் சண்டாளரெனவும், இவர்களைத் தீண்டலாகாதெனவும், தங்கள் வாசஸ்தலமாகிய அக்கிரஹாரத்தினுள் இவர்கள் வந்தால் அவ்வக்கிரஹாரமே தீட்டாய்விடுமெனவும் ஏற்படுத்தி ஒதுக்கிவிட்டனர். முறையே பறையர் தங்கள் வாசஸ்தலங்களுக்குப் பறைச்சேரி எனவும், அதனுள் பிராமணர் வரலாகாதெனவும், வந்தால் சூத்திரர் முதலியோரை வசப்படுத்திக்கொண்டு அவர்கள் பொருளைக்கிரகிப்பதுபோலத் தம்மவர்களையும் வசப்படுத்திக்கொண்டு நாசப்படுத்துவார்கள் எனக் கருதி, பிராமணரைப் பறைச்சேரியினுள் வரவொட்டாது துரத்துகின்றனர். பிராமணருக்கும் பறையருக்கும் துவேஷமுண்டாய் ஒருவரையொருவர் பகைத்து அக்கிராஹாரத்தினுள் பறையரும், பறைச்சேரியினுள் பிராமணரும் போகக்கூடாதென ஏற்படுத்திக்கொண்டனர். அவ்வாறே நீங்களும் பிராமண புரோகிதர்களை உங்கள் மனைகளுக்குள் வராவண்ணம் தடுத்துவிடுங்கள். அவர்கள் உங்கள் மனைகளுக்குள் வருவது என்று தடைப்படுகின்றதோ அன்று முதல் உங்களுக்கு க்ஷேமமுண்டாகும்.

29. ஐரோப்பா கண்டத்தின் பூர்வகுடிகளுக்கு டியூரேனியன்ஸ் எனவும், மற்றக் கண்டங்களின் பூர்வகுடிகளுக்கு அபரிஜியன்ஸ் எனவும் சொல்லப்படும். ஆரியராகிய காகேஷியர் ஹிண்டுகுஷ் காகேஷியமலையடிவாரங்களினின்று மற்ற விடங்களுக்குக் குடியேறியவர்களானதனால் காகேஷியரெனப்படுகின்றனர். இக்காகேஷியருக்கே ஆரியர் என மறுபெயர் வழங்குகின்றது. ஆரியர் என்பது ஆரோ என்னும் மொழியினின்று வந்தது. ஆரோ என்னின் வேளாண்மைசெய்தல் எனப்பொருள். ஆகையால், ஆரியர் என்னின் வேளாண்மைசெய்பவர்கள் எனப்பொருளாம். டியூரேனியன்ஸ் என்னின் ஓரிடத்தில் தங்கி பயிர்செய்து ஜீவனஞ்செய்யாமல் அங்குமிங்குந் திரிந்து ஜீவனஞ்செய்யும்

நாடோடிகள் என்பதே அதன் பொருள். ஆகையால், பறையர் டியூரேனியன்ஸைப்போல நாடோடிகளாக இராமல் ஆரியரைப்போலவே ஒரே இடத்தில் தங்கி வேளாண்மை செய்து ஜீவித்து வருவதால் இவர்களையும் ஆரியர்களென்றே அங்கிகரிக்கவேண்டும்.

30. பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரராகிய நால்வகை வருணத்தவரும் ஆரியரெனவும், இவ்வாரியர் பூர்வகாலத்தில் ஜாதிவேற்றுமையின்றி ஐக்கப்பட்டிருந்தனரெனவும், அவ்வாறு ஐக்கப்பட்டிருந்தகாலத்தில் பலவகைத் தொழில்களை நான்கு பிரிவாகப் பிரித்து, எவரெவர்க்கு எந்தெந்தத்தொழிலில்பிரியமோ அவரவர் அந்தந்தத்தொழிலைப் புரியலாமெனவும் ஏற்படுத்தினர். அவ்வாறே எவரெவர் எந்தெந்தத் தொழிலைக் கைப்பற்றினரோ அந்தந்தச் சந்ததியார் அந்தந்தத் தொழிலையே பின்பற்றவேண்டுமென ஏற்படுத்தினர். அதற்குச் சிலகாலஞ் சென்றபின் எவரெவர் எந்தெந்தத் தொழிலைப் புரிந்து வந்தனரோ அவரவர் அந்தந்தத் தொழிலினின்று மற்றொரு தொழிலில் பிரவேசிக்கலாகாதென ஏற்படுத்தி, ஒதுந் தொழிலில் தங்களுக்குச் சிறப்பும், சௌக்கியமும் உண்டாயிருப்பதை யுணர்ந்து தாங்களே உயர்ந்த ஜாதியாரெனவும், தங்கள் நிபந்தனைகளுக்குட்படாத பறையரைப் பூர்வகுடிகளெனவும், அப்பூர்வகுடிகள் சண்டாளரெனவும், சண்டாளராகிய இவர்கள் நால்வகை வருணத்தவராகிய ஆரியருக்குப் புறம்பே ஒதுக்கப்பட வேண்டுமெனவு மேற்படுத்தினர். நீகிரோவருக்கும் காகேஷியருக்கும், மங்கோலியருக்கும் காகேஷியருக்கும், படகோனியருக்கும் காகேஷியருக்கும் பேதாபேதங்களிருப்பதுபோலக் காகேஷியராகிய ஆரியருக்கும் பிராமணர் பூர்வகுடிகளென்று சொல்லும் பறையருக்குங் கிஞ்சித்தும் பேதமின்மையால் பறையரையும் ஆரியரென்றே அங்கிகரிக்கவேண்டும்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்